RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29,11 நவம்பர் 2022 இதழ்:- 29

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## மீண்டும் கப்பலில் தமிழ் அகதிகள்! கேள்விக்குறியுடன் வியட்நாமில்!

ஈழநாட்டிற்காக விசேட செய்திக்கட்டுரை
- யாழ்.நகரில் இருந்து பார்த்தீபன் -





பிலிப்பைன்ஸை அடுத்துள்ள நடுக்கடலில் 306 இலங்கை தமிழர்களுடன் தத்தளித்துக் கொண்டிருந்த படகை ஜப்பானின் கப்பலொன்று மீட்டிருக்கின்றது. இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த மீன்பிடிப் படகு சேதமடைந்து ஸ்பிராட்லி தீவுகளில் தத்தளித்துக் கொண்டிருந்தத நிலையில் விடுக்கப்பட்ட அவசரக் கோரிக்கையையடுத்து இந்த மீட்புப் பணி இடம் பெற்றது.

நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பலில் இருப்பவர்களுக்கு என்ன நடக்குமோ என்ற பதைபதைப்புடன் 24 மணி நேரமாக இருந்தவர்கள் இந்த மீட்புச் செய்தியை அறிந்து நிம்மதி அடைந்திருக்கின்றார்கள். ஆனால் மீட்கப்பட்டவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகத் தான் இருக்கப் போகின்றது. அவர்களை (3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4



## வடக்கு ஆளுநரின் பரிந்துரையில் வீதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
18 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence / Morningside
Scarborough $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route
Dixie & Clark
Brampton $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded
Sheppard & Warden
Scarborough $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony
Mccowan/Hwy 401
Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl
Eglinton & Mccowan
Scarborough $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!
Yonge St & Finch Ave
Toronto $698,000
Bedrooms: 2 Washrooms: 2
Steps To Yrt, Go Bus.
Eglinton/Markham
Scarborough $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Renovated W/O To the Balcony
Simcoe & Ritson
Oshawa $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors
Simco St N/ Darcy
Oshawa $1,298,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen
Markham & Major Mackenzie
Markham $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space
Keele/Sheppard
Toronto $855,000
Bedrooms: 3 Washrooms: 2
*Investment Property*!
401 & Mccowan Rd
SOLD
Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Location! Location! Location!
Bellamy & Lawrence
FOR LEASE
Scarborough $2,850
Bedrooms: 3 Washrooms: 2
$$$ Spent On Upgrades
Mclevin & Neilson
FOR LEASE
Scarborough $2,600
Bedrooms: 2 Washrooms: 2
Renovated Brand New Kitchen
Markham & Denison
FOR LEASE
7325
Markham $2,300
Bedrooms: 1+1 Washrooms: 1
Upgraded & Maintained Like New
Thickson & Burns
FOR LEASE
Whitby $2,250
Bedrooms: 3 Washrooms: 3
Close To 401 Exit And Go Train
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு வீட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# மீண்டும் கப்பலில் தமிழ் அகதிகள்! கேள்விக்குறியுடன் வியட்நாமில்!

ஈழநாட்டிற்காக விசேட செய்திக்கட்டுரை
– யாழ்.நகரில் இருந்து பார்த்தீபன் –



பிலிப்பைன்ஸை அடுத்துள்ள நடுக்கட லில் 306 இலங்கை தமிழர்களுடன் தத்த ளித்துக் கொண்டிருந்த படகை ஜப்பா னின் கப்பலொன்று மீட்டிருக்கின்றது. இவர்கள்கள் பயணித்துக் கொண்டி ருந்த மீன்பிடிப் படகு சேதமடைந்து ஸ்பிராட்லி தீவுகளில் தத்தளித்துக் கொண்டிருந்தத நிலையில் விடுக்கப் பட்ட அவசரக் கோரிக்கையையடுத்து இந்த மீட்புப் பணி இடம்பெற்றது.

நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பலில் இருப்பவர்களுக்கு என்ன நடக்குமோ என்ற பதைபதைப்புடன் 24 மணி நேர மாக இருந்தவர்கள் இந்த மீட்புச் செய்தியை அறிந்து நிம்மதியடைந்திரு க்கின்றார்கள். ஆனால், மீட்கப்பட்டவர் களின் எதிர்காலம் கேள்விக்குறியாகத் தான் இருக்கப் போகின்றது. அவர்களை இலங்கைக்குக் கொண்டு வருவது தான் இலங்கை அரசின் விருப்பமாக உள் ளது.

இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டால் அவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள். சித்திரவதைக்குள்ளாவார்கள் என்பதால் அவர்கள் விரும்பும் நாடு ஒன்றுக்கு அவர்கள் அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டு ள்ளது. இலங்கைப் பாராளுமன்றத்திலும் புதன்கிழமை இந்த விவகாரம் கிளப்பப் பட்டிருக்கின்றது. மனிதாபிமான அடிப் படையில் இவர்களது விவகாரம் கையா ளப்பட வேண்டும் என இரண்டு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரை யாற்றியுள்ளார்கள்.

### மியன்மார் கொடியுடன்

மியன்மார் கொடியுடன் பயணித்துக் கொண்டிருக்கும் லேடிஆர் 3என்ற பெய ரிலான மேற்படி படகு தான் ஆபத்தில் சிக்கியுள்ளது. இந்த படகு 306 இலங்கைத் தமிழர்களுடன் கனடா செல்ல முயல்கின்றது என தகவல் கிடைத்ததாக வியட்நாமின் கடல்சார் மீட்பு மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணை ப்பு நிலையம் முதலில் தெரிவித்து ள்ளது. பின்னர் இந்தக் கப்பல் மூழ்குவ தாகவும், அதனைக் காப்பாற்ற உடனடி யாக எதனையாவது செய்யுமாறும் கப்பலில் இருந்தவர்கள் அவசரக் கோரிக் கைகளை அனுப்பத் தொடங்கியிருந்தார் கள்.

நவம்பர் ஐந்தாம் திகதி குறிப்பிட்ட கப்பல் தென்கரையோரத்தில் உள்ள வுங் டாவுவில் இருந்து 258 கடல்மைல் தொலைவில் காணப்பட்டது . படகின் இயந்திர அறைக்குள் நீர் சென்றதால் அந்த கப்பல் தத்தளிக்க தொடங்கியது. கடல் கொந்தளிப்பாக காணப்பட்டுள் ளது. வியட்நாமின் கடல்சார் மீட்பு மற் றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு நிலை யம் கப்பலை தொடர்பு கொள்ள முயற்சி த்துள்ளது. அந்த பகுதியில் உள்ள ஏனைய கப்பல்களிற்கு அவசர சமிக் ஞையை அனுப்பியுள்ளது. திங்கட் கிழமை அந்த பகுதியில் ஜப்பான் கொடி யுடன் ஹெலியோஸ் லீடர் என்ற கப்பல் காணப்பட்டுள்ளது.

படகில் தத்தளித்துக் கொண்டிருந்த வர்களை காப்பாற்றுமாறு அந்த கப்ப லிற்கு உத்தரவு வழங்கப்பட்டது ஜப்பான் கப்பல் உடனடியாக தத்தளித் துக் கொண்டிருந்த படகை நோக்கி சென்றுள்ளது. படகில் இருந்தவர்கள் மிகுந்த பதற்றத்துடனும் பீதியுடனும் காணப்பட்டுள்ளனர். ஜப்பான் கப்பல் படகில் இருந்தவர்களை மீட்டு அவர் களிற்கு உடனடியாகவே மருத்துவ சிகிச்சைகளை வழங்கியுள்ளது. வியட் நாம் மேலும் ஐந்து கப்பல்களை அந்த பகுதிக்கு அனுப்பியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### வியட்நாமில் விசாரணை

20 சிறுவர்கள், 19 பெண்கள் உட்பட 306 பேரும் செவ்வாய்கிழமை வியட் நாமின் வுங் டாவுவை சென்றடைந்தார் கள். வியட்நாமிய அதிகாரிகள் தமது நாட்டுச் சட்டப்படி இவர்கள் மீதான விசாரணையை முன்னெடுக்கவிருக் கின்றார்கள். விசாரணை முடிவில் இவர் களுக்கு என்ன நடக்கும் என்பது இப் போது மிகப்பெரிய கேள்வியாக இருக் கின்றது.

இவர்களை இலங்கைக்குத் திருப்பியனு ப்புமாறு இலங்கை கோரிக்கை விடலாம். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களை மீள இலங்கைக்கு அழை த்து வர நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியிருக்கின்றார் . அதேவேளை யில், இவர்களை தாம் விரும்பிய நாடொ ன்றுக்குச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் இராமதாஸ் வலியுறுத்தி அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

கப்பலில் பயணித்தவர்கள் எந்த நாட்டில் இருந்து புறப்பட்டவர்கள் என்பது தொடர்பாகவும் வியட்நாமிய அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றார் கள். தென்கிழக்காசிய நாடொன்றிலிரு ந்தே பெரும்பாலும் பிலிப்பைன்ஸிலிரு ந்து இந்தப் படகு புறப்பட்டதாக நம்பப் படுகின்றது. இந்தக் கப்பல் மியன்மாரி லிருந்தே புறப்பட்டதாக பயணி ஒருவர் தெரிவித்திருக்கின்றார். இலங்கையிலி ருந்து வெவ்வேறு கால. கட்டங்களில் விமான மூலமாக அல்லது படகுகள் மூலமாக இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்குச் சென்றவர்களே இந்தப் படகில் சென்றிருக்கலாம் எனத் தெரிகின்றது. அவுஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட பலர் இந்தோனேஷியா உட் பட தென்கிழக்காசியாவில் உள்ள பல நாடுகளில் இருக்கின்றார்கள். நிரந்தர வதிவிடம் இன்றித் தவிக்கும் இவர் களின் கனவாக இருக்கின்றது.

### ஆபத்தான கடல் பயணங்கள்

ஆபத்தான படகுப் பயணங்கள் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் புதி தல்ல. 1983இல் இடம்பெற்ற இனப்படு கொலையைத் தொடர்ந்து சுமார் இரண்டு லட்சம் ஈழத் தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தார்கள். இவர்கள் அனைவருமே படகுகளில் பயணம் செய்தவர்கள் தான். இந்தப் பயணங்களின் போது படகு கவிழ்ந்து பலர் மரணித்திருக்கின்றார்கள். கடற் படைத் தாக்குதல்களிலும் பலர் கொல் லப்பட்டிருக்கின்றார்கள்.


இலங்கையில் இறுதிப்போர் முடிவின் பின்னர் சுமார் 492 ஈழத் தமிழர்களுடன் சன் சீ என்ற கப்பல் கனடாவின் பிரிட் டிஷ் கொலம்பியாவை சென்றடைந்தது ஒரு வரலாறு. 2010 ஒகஸ்ட்டில் இந்தப் படகு பிரிட்டிஷ் கொலம்பியாவை சென் றடைந்த போது அதில் சென்ற அனை வருமே அங்கு அரசியல் அடைக்கலம் கோரினார்கள்.

தாய்லாந்திலிருந்து மூன்று மாத காலம் பயணித்து இந்தப் படகு அப்போது கனடா மண்ணில் தரை தட்டியது. இதில் பயணம் செய்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்ய ப்பட்டனர் இவர்களுடைய அகதிக் கோரிக்கை பல வருடகாலமாக பரி சீலனையிலேயே இருந்தது. இதில் சென் றவர்களில் ஒருவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியிருந்தன.

### 306 பேரின் நிலை என்ன?

தற்போது வியட்நாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட படகும் இதே போல நீண்ட பயணம் ஒன்றுக்கு தயாராக இருந்திருக்கலாம். இதில் பயணம் செய்தவர்கள் (20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# மாவீரர் நினைவு கூரலை போட்டி அரசியலாக்கி அரசாங்கத்துக்கு வாய்ப்பு வழங்கும் வேலையை தமிழ்த் தேசியக்கட்சிகள் செய்யக்கூடாது!

யுத்தத்தில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் உரிமையை அரசாங்கம் எந்த வகையிலும் தடுக்கக் கூடாது. இறுதி யுத்தத்தில் உயிர்நீத்தவர்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் அடங்குவர். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கும் குடும்பமுண்டு – உறவினர்கள் உண்டு. அவர்களைப் பொறுத்தவரையில் தங்களின் பிள்ளைகளை உறவினர்களை நினைவுகூரும் உரிமையை கோருவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு.


ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில், நினைவு கூர்வதற்கான உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. துயிலும் இல்லங்களில் நினைவு கூர்வதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டிருந்தன. கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்ததைத் தொடர்ந்து மீளவும் சில கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோ அவையே மீளவும் அமுல்படுத்தப்பட்டன. தற்போது குறித்த கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே பொலிஸார் விடயங்களை நோக்குவதாகத் தெரிகின்றது. எவ்வாறெனினும், நினைவுகூரும் உரிமையை எந்த வகையிலும் மறுதலிக்க முடியாது.நினைவு கூர்வது தொடர்பான அரச கட்டுப்பாடுகள் மீது கேள்வியெழுப்புவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதேவேளை, நினைவுகூரும் விடயத்தை போட்டி அரசியலாக்கி அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கிவிடும் வேலையை தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் செய்யக்கூடாது. திலீபனை நினைவுகூரும் விடயத்தில் ஏற்பட்ட அனுபவங்களை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நினைவு கூரும் உரிமைக்காக குரல் கொடுக்கும் நாம் மறுபுறமாக அதனை பரிகசிக்கும் நோக்கில் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நினைவுகூர்தலை கட்சி அரசியலுக்கு அப்பால்பட்ட ஒரு கடப்பாடாகவே அனைத்து கட்சிகளும் கைக்கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தாம் மட்டுமே என்னும் போலியான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து பிளவுகளை ஏற்படுத்தக் கூடாது. நினைவு கூர்தலை முறையாக மேற்கொள்வதற்கு பொது அமைப்புக்கள் இருப்பின் அவர்களுடன் ,ணைந்தே கட்சிகள் செயல்பட வேண்டும். அவர்களைப் புறம் தள்ளி தாங்கள் மட்டுமே உரிமையாளர்கள் என்பது போல் செயல்பட எத்தனிப்பதால் தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. திலீபனை நினைவு கூரும் விடயத்திலும் இது தான் நடந்தது. இதற்கப்பால், நினைவு கூர்தலை போட்டி அரசியலாக்குவது அரசியல் நோக்கிலும் தவறானதாகும். ஏனெனில், நினைவு கூர்தலையே முறையாக நேர்மையாக முன்னெடுக்க முடியாதவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் நலன்களுக்கான அரசியலை முன்னெடுக்கப் போகின்றனர் என்னும் கேள்வியே இறுதியில் துருத்திக் கொண்டு தெரியும். கடந்த பதின்மூன்று வருடங்களில், நினைவு கூர்தலைக் கூட தமிழ் தலைமைகள் என்போரால் ஓரணியாக கருத்தொருமித்து முன்னெடுக்க முடியவில்லை. களத்தில் மட்டுமல்ல புலத்திலும் இது தான் நிலைமை. ஒவ்வொரு கார்த்திகை மாதத்திலும் நினைவுகூர்தலுக்கான சண்டைகளையும் மாறுபட்ட அபிப்பிராயங்களையும் ஒருவரை ஒருவர் வசைபாடும் நிலைமைகளையுமே நாம் கண்டிருக்கின்றோம். இனியாவது, கடந்த கால தவறுகளைப் புறம்தள்ளி ஒற்றுமையுடன் விடயங்களை கையாள்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் எவருமே இன்றைய கட்சி அரசியலுக்காக இறந்தவர்கள் அல்லர். அவ்வாறானவர்களை கட்சி அரசியலால் பிரிக்க முற்படுவது அடிப்படையிலேயே அவர்களை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

# கனடியத் தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் உயர்மட்டத்தில் கலந்துரையாடல்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கனேடிய வர்த்தக பிரதிநிதிகள் குழு 09 நவம்பர் 2022 கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது. இலங்கையில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து தூதுக்குழுவும் அமைச்சரும் விரிவாக கலந்துரையாடினர்.



இக்கலந்துரையாடலின் போது அமைச்சர் பிரேமஜயந்த, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்களின் போது வழங்கிய ஆதரவிற்கு கனடாவுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், அமைச்சரின் சமீபத்திய கனடா விஜயத்தின் போது நடைபெற்ற கலந்துரையாடலின்படி, உயர்கல்வியை தொடரும் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கனடா எடுத்த நடவடிக்கைகளுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். கனேடிய வர்த்தக பிரதிநிதிகள் இலங்கையில் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் கல்வி அமைச்சரிடம் விளக்கமளித்தனர்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



| ஆலயம் திறந்திருக்கும் நேரம் | பூசை நேரம்: |
| --- | --- |
| காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை | பகல் 12:00 முதல் மாலை 7:30 |
| மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை | உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம் |

அம்பாள் அடியார்களே!

16 நவம்பர் 2022 புதன்கிழமை
ஐயப்பன் மண்டல பூஜை ஆரம்பம் .

ஐயப்பன் மாலை போட விரும்பும் ஐயப்ப பக்தர்கள், ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

21 நவம்பர் 2022 திங்கட்கிழமை
சோம பிரதோஷ விரதம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு என்ற போர்வையில் மாவீரர் தினத்தைக் குழப்ப இராணுவ சாவடிகள் - சட்டத்தரணி ஸ்ரீகாந்தா காட்டம்!

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையை யும் கடத்தலையும் தடுக்கும் நோக்குடன் பிரதான வீதிகளில் இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிப்பதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் இதனைத் தெரிவித்த அவர், மாவீரர் நினை வஞ்சலி வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப் பொருள் தடுப்பு என்ற பெயரால் மேற்கொள்ள ப்படும் இந்த நடவடிக்கை நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவு களை உரசிப்பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமைய முடியும் என கூறியுள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது, பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தி யில் அன்றாட வாழ்கைக்கே அல்லாடிக் கொண்டிரு க்கும் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் போதாது என்ற ரீதியிலா இந்த நடவடிக்கை என்றே கேட்கத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் உட்பட தமிழ்ப் பிரதேசங்களில் இராணு வச் சோதனைச் சாவடிகள் என்பவை அநாவசியமான கெடுபிடிகளை ஏற்படுத்தியிருப்பது உளவியல் ரீதியாக அச்சுறுத்தி நிற்குமாறான வெறுப்புக்குரிய ஓர் பொறி முறையாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளன என்பதே அனுபவபூர்வமான உண்மையாகும்.

இந்தப் பின்னணியில் வடக்கின் ஆளுநர் இராணுவ சோதனைச் சாவடிகளை ஏன் பரிந்துரைத்துள்ளார் என்பது புதிராக உள்ளது. மிகவும் ஆட்சேபகரமான விடயமாக படைத்தரப்பினரால் தொடர்ந்து அனுசுப் பட்டு வந்திருக்கும் மாவீரர் நினைவஞ்சலி வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப் பொருள் தடுப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப் பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமைய முடியும் என்பதை தயக்கம் எதுவும் இன்றி சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த சோதனைச் சாவடிகளில் சில சிற்றெறும்புகள் வேண்டுமானால் சிக்க லாம். ஆனால் சுண்டெலிகளும் பெருச்சாளிகளும் ஒருபோதும் மாட்டிக்கொள்ளப் போவதில்லை.

கடலிலே கடற்படையிடம் போதைவஸ்து மீன்கள் சிக்குவது போல தரையில் நிகழப் போவதில்லை. இந்தச் சூழ்நிலையில் அர்த்தமற்ற இந்த திட்டத்தை கைவிடுமாறு வடமாகாண ஆளுநரை நாம் கோரு கின்றோம். அதே வேளையில் யாழ். மாவட்டத்தில் விஸ்வரூபம் எடுக்க முனையும் போதைப் பொருள் பிரச்சினைக்கு முடிவு கட்ட அறிவார்ந்த ரீதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசரமாக எடுக்க ப்படுவது அவசியமானது என்றும் நாம் தெரிவிக்க




விரும்புகின்றோம். சமூகத்தின் சகல தரப்பினரையும் போதைப் பொருட்களுக்கு எதிரான போராட்டம் ஒன்றில் உத்வேகத்தோடு ஈடுபடுத்தும் திட்டமொன்று தீட்டப்பட்டு நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் ஆகும். சமூகத்துறை, நிர்வாகத்துறை, காவல்துறை உட்பட படைத்தரப்பு மற்றும் சட்டத் துறை, நீதித்துறையோடு சமயத் துறையையும் உள்ளடக்கிய ஓர் பரந்த திட்டம் வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே சமூக த்தின் சகல பிரிவினரின் பூரண ஒத்துழைப்பை பெற்று இப்போராட்டத்தில் வெற்றிபெற முடியும்.

போதைப் பொருள் பாவனையில் சிக்கியுள்ள இளைய சந்ததியினரை மீட்டெடுப்பதில் உளவியல் ரீதியான செயற்பாடுகளும் பொருளாதார ஊக்குவிப்புடன் கூடிய கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளும் அவசியமானவை என்பதையும் நாம் அழுத்திக் கூற விரும்புகின்றோம்.

இந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு உதவுவ திலும் ஊக்கம் அளிப்பதிலும் சமூக செயற்பாட்டாளர் களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது என் பதை சொல்ல வேண்டியதில்லை. இறுதியாக போதை ப்பொருள் வியாபாரத்தையும் பாவனையையும் முறியடி ப்பதில் கசப்பானதோர் உண்மையை தரிசித்தே தீர வேண்டும்

அதிகாரம் மிக்க பலரின் ஆதரவோடும் அனுசரணை யோடும் தான் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் கௌரவத்தோடு வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதே அந்த உண்மை. அது மட்டுமன்றி இவர்களின் தென்னில ங்கை தொடர்புகள் ஊடாகவே யாழ்ப்பாணம் இன்று மெல்ல மெல்ல நாசமாகிக் கொண்டிருக்கின்றது. இந்த ஒட்டுமொத்த வலைப்பின்னலும் கண்டறியப்பட்டு ஏதோ ஒரு விதத்திலாவது சம்பந்தப்பட்டோர் மீது சட்டம் பாயாத வரையில் பிரச்சினைக்கு முடிவு கட்டு வது என்பது பெரும் போராட்டமாகவே தொடரும் என்றுள்ளது.

# போரில் இறந்தவர்களை நினைவு கூர எந்தத் தடையும் இல்லை- நீதியமைச்சர்




இலங்கையில் போரில் இறந்தவர்கள் யாராக இருந்தா லும் அவர்களை நினைவேந்த அவர்களின் உறவு களுக்கு முழு உரிமை உண்டு. இதில் அரசியல் தலையீடுகள், பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள் இருக்கவே கூடாது என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்

மாவீரர் நாளை கடைப்பிடித்தால் சட்ட நடவடிக்கை என்று பொலிஸாரின் மிரட்டல்கள் தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் வாதிகள் தங்கள் செல்வாக்கைச் செலுத்துவதை நிறுத்த வேண்டும். மக்கள் தமது உறவுகளைச் சுதந்திரமாக நினைவேந்த அவர்கள் இடமளித்து விலகி நிற்க வேண்டும்.

ஆனால், நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி எவரும் நினைவேந்தல்களைப் பகிரங்கமாகச் செய்ய முடி யாது. அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரை ஆத்திர மூட்டும் வகையில் எவரும் செயற்படக் கூடாது என மேலும் தெரிவித்தார்.

மாவீரர் வாரத்தை கடைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுகின்றன. இதன்போது பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகள் அதிகரித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பந்தன் காப்பாற்றிய ஜனநாயகம்?

ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பங்களிப்பு க்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு விருது வழங்கப்பட்டிருக்கின்றது. தென்னிலங்கையை தளமாகக் கொண்டிருக்கும் இன்ஷ்டியூ ட் ஒவ் பொலிட்டிக்ஸ் என்னும் அமைப் பானது மேற்படி விருதை வழங்கியிருக்கின்றது. ஒரு தென்னிலங்கை அமைப்பு விருது வழங்குமளவுக்கு சம்பந்தன் சேவையாற்றியிருக்கின்றார்.

கடந்த பதின்மூன்று வருடங்களாக முன்னெடுக்கப் பட்ட நல்லிணக்க முயற்சிகள் படுதோல்வியடைந்தி ருக்கும் நிலையில் தான், சம்பந்தன் நல்லிணக்கத்து க்காக பங்களித்ததாகக் குறித்த நிறுவனம் கருதியிரு க்கின்றது.

இதிலிருந்து, தென்னிலங்கை சிங்கள சமூகம் சம்பந் தனை எந்தளவுக்கு உற்று நோக்கியிருக்கின்றது என்பதும் தெளிவாகின்றது. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின் றது. தனக்குப் பின்னரான காலத்தில் கூட்டமைப்பை முன்னெடுப்பது தொடர்பில் சம்பந்தன் இதுவரையில் அக்கறைப்படவில்லை. சம்பந்தன் இயங்கக்கூடிய நிலையில் இருக்கின்ற போதும் கூட, கூட்டமை ப்பை உள்ஜனநாயகமுள்ள ஓர் அமைப்பாகப் பாது காக்கவில்லை. அதனைப் பலப்படுத்த அனுமதிக்க வில்லை. உள் ஜனநாயகப் பிரச்சனைகளின் காரண மாகவே கூட்டமைப்புக்குள் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டன. இதன் காரணமாகவே கூட்டமைப்பு தொடர்ந்தும் பின்னடைவை சந்தித்து வருகின்றது.

கடந்த தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுக்கு கூட்ட மைப்பின் உள் முரண்பாடுகளே பிரதான காரணம். கூட்டமைப்பு வெறுமனே தேர்தலை எதிர்கொள்வதற் கான ஒரு வழிமுறையாகவே இதுவரையில் கையா ளப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே தமிழ் அரசு கட்சி ஒருவாறும் பங்காளிக் கட்சிகள் இன் னொரு மாதிரியும் செயல்பட்டு வருகின்றன.

இவை அனைத்துக்கும் சம்பந்தனின் தலைமைத் துவ பலவீனங்களே காரணம். ஆனால், இன்று வரை யில் அதனை சரி செய்ய சம்பந்தன் முயற்சிக்க வில்லை என்பது தான் பாரதூரமான தவறாகும்.

2009இற்கு பின்னர், தமிழ்த் தேசிய அரசியல் முற்றி லும் ஜனநாயக வழிக்கு திரும்பியது. 2001இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது ஆயுத பலத்தின் அடிப்படையில் தான் கூட்ட மைப்பின் அரசியல் நகர்வுகள் தீர்மானிக்கப்பட்டன. உண்மையில் கூட்டமைப்புக்கு என்று பிரத்தியேக அரசியல் வேலைத்திட்டம் எதுவுமே அப்போது இருக்கவில்லை. ஆயுத பலத்தை நியாயப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கூட்டுக் குரலாகவே கூட்டமை ப்பின் பணி வரையறுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி கள், அவர்களுடன் மட்டும் தான் இலங்கை அரசாங் கமும், சர்வதேச சமூகமும் பேச வேண்டும் என்பதை உறுதியாகக் கூறுவதற்கான ஒரு குரலாகவே கூட்ட மைப்பு பயன்படுத்தப்பட்டது. அன்றைய சூழலில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளில் பங்கு கொண்ட கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கள் இதனை மீண்டும் மீண்டும் அழுத்திக் கூறி யிருந்தனர்.

ஆனால் 2009இல், போர் தோல்வியுடன் முடிவுற்ற பின்னர், ஒரு போர் தோல்விக்கு பின்னரான ஜனநாயக அரசியலை வழிநடத்த வேண்டிய பொறுப்பு சம்பந்தனுக்குக் கிடைத்தது. போருக்குப் பின்னரான அரசியலை கையாள வேண்டுமாயின் அதற்கு ஒரு வலுவான ஐக்கிய முன்னணி தந்திரோபாயம் அவசி யம். அதாவது, கடந்த காலத்தின் தவறுகளை ஆராயும் பக்குவத்துடன் வெளியிலிருக்கும் அனை வரையும் இணைத்துக் கொண்டு தமிழ் ஜனநாயக அரசியலை பலப்படுத்தியிருக்க வேண்டும். இதற்கான அனைத்து வாய்ப்புகளும் சம்பந்தனுக்குக் கிடைத்தி ருந்தது. சம்பந்தனை தலைவராக ஏற்றுக்கொள்ள எவருமே மறுக்கவில்லை. (22ம் பக்கம் பார்க்க)

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

# வடக்கு ஆளுநரின் பரிந்துரையில் வீதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் என யாழ்.தளபதி அறிவிப்பு!



யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினரால் முக்கிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து வீதியால் பயணிப்போரை சோதனையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப் பொருட்கள் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட நீதி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரால் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் இடம் பெற்றிருந்தது. இதன் போது வடக்கு மாகாண ஆளுநரின் பரிந்துரைக்கு அமைய யாழ்ப்பாணத்தின் முக்கியமான இடங்களில் இராணுவத்தினரால் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு போதைப் பொருள் விநியோகம் மற்றும் போதைப் பொருள் பாவிப்போர் கைதுசெய்யப்படவுள்ளதாக யாழ். இராணுவ கட்டளை தளபதி தெரிவித்துள்ளார். எனவே பொதுமக்கள் இந்த விடயத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி, எதிர்கால சந்ததியினர் போதைக்கு அடிமையாவதை தடுக்க உதவுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### நாகவிகாராதிபதியின் போதனை?

இதேவேளை வடக்கு மீனவர்கள் போதைபொருள் கடத்தலில் ஈடுபடக் கூடாது அவ்வாறு ஈடுபடுவோர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி வடக்கு மீனவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதியை வடக்கு மீனவர்கள் கடலட்டை விவகாரம் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். வடபகுதியில் போதை பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது ஆனால் அந்த போதை பொருள் இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே கடற்தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் தமது படகுகளில் ஏதாவது போதை பொருள் கடத்தப்படுவது தொடர்பில் தகவல் இருந்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அத்தோடு மீனவர்களாகிய நீங்கள் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தலுக்கு துணை போகக்கூடாது இந்த விடயம் தொடர்பில் மீனவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## சீனா தொடர்பில் கனடா பிரதமர் குற்றச்சாட்டு



கனடா தேர்தலில் தலையிட சீனா முயற்சித்ததாக அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பரபரப்பு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். .இது குறித்து அவர் கூறியதாவது, கனடாவில் சீனாவின் சட்டவிரோத காவல்நிலையங்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணையின்போது கனடாவில் அண்மையில் நடந்த தேர்தலகளில் சீனா தலையிட முயற்சித்ததை உளவுத்துறை அதிகாரிகள் கண்டு பிடித்தனர். அரசியல் வட்டங்களுக்குள் செல்வாக்கு பெறுவதற்காக சீனா தனக்கு ஆதரவான வேட்பாளர்களை வெற்றி பெற செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. ஆளும் லிபரல் கட்சி மற்றும் எதிர்க்கட்சியான கொன்சர்வேடிவ் கட்சி ஆகிய இரு முக்கிய அரசியல் கட்சிகளையும் குறிவைத்து இந்த குறுக்கீடு முயற்சி நடந்துள்ளது. கனடாவின் ஜனநாயக அமைப்புகளுடன் சீனா ஆக்கிரமிப்பு விளையாட்டுகளை விளையாடுகிறது. நமது தேர்தல் செயல்முறைகள் மற்றும் அமைப்புகளின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்த நாம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். மேலும் தேர்தல் குறுக்கீடுகளுக்கு எதிரான போராட்டத்தில், நமது ஜனநாயகம் மற்றும் நிறுவனங்களின் வெளிநாட்டு தலையீட்டுக்கு எதிராக தொடர்ந்து செயல்படுவோம் என ட்ரூடோ தெரிவித்தார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க சிங்களக் கட்சிகள் ஓரணியாக வேண்டும்

தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படாமல் இருப்பதற்கு பிரதான காரணம் சிங்கள கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதே. இதை தமிழ் மக்களுக்கு பாடம் எடுக்க முற்படும் சிங்கள அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான தமிழீழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இனப் பிரச்னை தீர்வுக்காக தமிழ் கட்சிகள் ஓரணியில் வரவேண்டும் என்று கூறியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாக சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் பாராளுமன்றங்களில் முன் வைக்கப்பட்ட போது, அதை எதிர்த்தவர்கள் யார் என்ற வரலாற்றை இந்த நாடே அறியும். பல தசாப்தங்களாக ஆளும் கட்சிகள் ஒரு தீர்வைக் கொண்டு வருகின்ற போது சிங்கள எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார்கள்.

எதிர்க்கட்சிகள் தமிழர்களுக்கான தீர்வுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற போது ஆளும் கட்சிக்குள் இரண்டாகப் பிரிந்து நின்று அதை எதிர்ப்பார்கள். தமிழ் மக்களுக்கு ஆலோசனை சொல்பவர்கள் இலங்கை அரசியலில் பிரதானியாக, தலைவராக, அமைச்சராக பதவியில் இருந்தபோது நடைபெற்ற விடயங்களே அதற்கு சான்றாக அமையும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ அரசு காலத்தில் தமிழ் மக்க

ளால் ஏகோபித்துத் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளை தீர்வு காண பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி இறுதி வரை அவர்களுடன் பேச்சு நடத்தாமலே தவிர்த்து வந்தார். அப்போது அந்தக் கட்சியின் முக்கிய தலைவராக அமைச்சராகப் பதவியில் இருந்தவரே நிமால் சிறீபால டி சில்வா.

இதேபோன்று நல்லாட்சி அரசாங்க காலத்தில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளடங்கியதாக ஒரு புதிய அரசியல் யாப்பு முன்வைக்கப்படுவதாக இருந்தது. அந்த நேரத்தில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மையை சிதைத்து அரசியல் யாப்பு நிறைவேறாமல் குழப்பம் விளைவித்தது சிங்கள கட்சிகளே. தமிழர்கள் அல்ல என்பதையும் கோடிட்டு காட்ட விரும்புகிறோம்.

அப்போதும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் அந்தத் தரப்பில் மூத்த அமைச்சராக பணியாற்றிக் கொண்டிருந்தார். ஏற்கனவே அரசியல் யாப்பிலே இருக்கக்கூடிய அதிகாரங்களை முற்று முழுதாக நடைமுறைப்படுத்துவதற்குக் கூடசிங்களத் கட்சிகள் ஒற்றுமையாக முன் வருவார்களா? அதில் கூட தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டு விடக்கூடாது என்பதற்காக பிரிந்து நின்று குரல் கொடுப்பவர்கள் சிங்கள கட்சிகளே.



இன்னும் வரலாற்றில் சிறிது தூரம் பின் சென்றால் 1987இல் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை அப்போது, ஆளும கட்சியில் இருக்கும் ஒரு பகுதியினர் எதிர்க்கட்சியோடு சேர்ந்து நின்று எதிர்த்தார்கள். அது தமிழர்களுக்கான தீர்வு அல்ல. ஆனால்,

குறைந்தபட்ச அதிகாரங்கள்கூட தமிழர்களுக்கு கிடைத்து விடக்கூடாது என்பதில் தான் சிங்களக் கட்சிகள் குறியாக இருந்தன.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி முறையில் அமைய வேண்டும் என்பதில் தமிழ் மக்களும் அரசியல் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளோம். அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அழைப்பு எந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டாலும் சமஷ்டி முறையிலான தீர்வையே தமிழ் மக்களின் அனைத்துத் தரப்பினரும் அரசியல் தீர்வாக முன்வைத்திருப்பதை மீண்டும் உங்களுக்கு நினைவூ ட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நிறைவேற்றுவதற்கு சிங்கள கட்சிகள்ஓர் அணியில் வருவதே பிரதானம். ஆகவே, அவர்களை ஓரணியில் வருமாறு கோரிக்கை முன்வைக்கிறோம் என்றுள்ளது.

# மோடி - ரணில் சந்திப்பு முயற்சி தோல்வி! பதவி விலகுகிறார் மிலிந்த மொறகொட?




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்க வைப்பதற்கு இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. இந்நிலையில், அவரை மீறி முன்னெடுக்கப்படும் விடயங்களால் அதிருப்தியடைந்துள்ள மிலிந்த தனது தூதுவர் பதவியை துறக்கவுள்ளார் என்று கொழும்பு அரசியல் உயர்வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 4 மாதங்கள் கடக்கின்றன. நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்பவர் முதல் பயணமாக இந்தியாவுக்கு செல்வது சம்பிரதாயம். இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அங்கு வருமாறு இதுவரை உத்தியோக பூர்வமாக எந்த அழைப்பும் விடுக்கப் படவில்லை. இது தொடர்பில் அரசாங்கமும் பல கோரிக்கைகளை இந்தியாவுக்கு விடுத்த போதிலும் அவற்றுக்கு சாதகமான பதில் எதுவும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில், இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட தனது தனிப்பட்ட உறவுகளைப் பயன்படுத்தி இந்தியப் பிரதமரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்க வைக்கும் முயற்சிகளை எடுத்தார். எனினும், அவரின் முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் அரசாங்கம் ஓர் இரகசிய நடவடிக்கையை முன்னெடுத்தது. ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க புதுடில்லிக்கு திடீர் இரகசிய பயணம் ஒன்றை மேற்கொண்டார். இது இந்திய தரப்பின் அழைப்பின் பெயரில் இடம்பெறவில்லை. அத்துடன், இந்திய தூதுவர் மிலிந்த மொறகொடவுக்கும் சாகலவின் பயணம் குறித்து தெரிவிக்கப்படவில்லை.சாகல தனது புதுடில்லி பயணித்தின் போது, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் மோகன் குவாத்ரா உள்ளிட்ட பல உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் இந்தியாவின் கடன் மறுசீரமைப்பு விடயம், ஜனாதிபதி ரணில் இந்திய பிரதமரை சந்திக்கவும் நேரம் ஒன்றை பெறுதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. ஆனால், இவை இரண்டுக்கும் இந்தியாவிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும், சாகல இந்தப் பேச்சுகளை இரகசியமாக நடத்தியதால் புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொடவுக்கு தெரியாமல் நடத்தப்படும் இந்த விடயங்களால் அவர் கடும் அதிருப்தியடைந்துள்ளார். இதனால், தற்போது இந்திய தூதுவர் பதவியில் இருந்து விலகுவதற்கு மிலிந்த முடிவு செய்துள்ளார்.

எது எப்படி இருப்பினும் மிலிந்த மொறகொட இந்த பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னரே திட்டமிட்டிருந்த போதிலும் சாகலவின் செயல்பாட்டால் இந்த முடிவு அவசரமாக எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இன்னும் சில நாட்களில் மிலிந்த மொறகொட தனது தூதுவர் பதவியை இராஜிநாமா செய்வார் என்ற அறிய வருகின்றது.

## தமிழர்களுக்கு அரசியல் தீர்வை நிச்சயாக வழங்குவோம் -நீதியமைச்சர்

புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்– எம்மைச் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளும் புதிய அரசமைப்பு தொடர்பிலும், தேசிய இனப்பிரச்னைக்கானஅரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் வழங்கிக் கலந்துரையாடி வருகின்றனர். எனவே, இந்தக் கருமத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் நிறைவுக்கு வர வேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார். அதற்கு முன் கைதிகள் விவகாரம் (தமிழ் அரசியல் கைதிகள்), காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கைதிகள் (தமிழ் அரசியல் கைதிகள்) சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

நல்லாட்சி அரசில் தீர்வு விடயத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது. ஆனால், தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கவில்லைஎன்று அர்த்தம் இல்லை. ஒத்துழைப்பு கிடைக்கின்றது. ஆனால், அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் காணி விவகாரம் (20ம் பக்கம் பார்க்க)

# காணாமல் போனோர் என யாரும் இல்லையென்றால் காணாமல் போனோர் அலுவலகம் எதற்கு? தலைவரை பதவி நீக்க வேண்டும்

காணாமல் போனவர்கள் என யாரும் இல்லை என்றால் காணாமல் போனோர் தொடர்பாக முறையிடுவதற்காக காரியாலயம் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது.

அதனால் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராயும் காரியாலயத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்து, செயற்திறமையான ஒருரை நியமிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் காணாமல் போனோர் தொடர்பாக ஆராயும் காரியாலயம் தொடர்பாகவும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ் தெரிவித்த கருத்து பதில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

காணாமல் போனோர் தொடர்பாக ஆராய்ந்து விசாரணை நடத்த மிகவும் கஷ்டத்துடனே காரியாலயம் அமைத்தோம். ஆனால் தற்போதைய அதன் தலைவர், காணாமல் போனவர்கள் என யாரும் இல்லை என தெரிவித்திருக்கின்றார்.

அவருக்கு பைத்தியம் பிடித்துள்ளதா என எனக்கு தெரியாது. ஏனேனில் காணாமல் போனவர்கள் என யாரும் இல்லை என்றால், இது தொடர்பாக ஆராய காரியாலயம் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது. அதனால் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராயும் காரியாலயத்தின் தலைவர் தொடர்பாக நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் காணாமல் போனவர்கள் தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்க காரியாலயம் அமைக்க பாராளுமன்றத்தில் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியிலேயே அனுமதித்துக் கொண்டோம். இதற்கு தற்போதுள்ள ஆளும் தரப்பினரே எதிராக இருந்தனர். நான் அமைச்சராக இருக்கும் போது இது தொடர்பான காரியாலயம் மாத்திறை, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் நாங்கள் திறந்துவைத்தோம். எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் எங்களுக்கு வேலை செய்ய இடமளிக்கவில்லை.

அதனால் காணாமல் போனவர்கள் தொடர்பாக தேடிக் கொள்ள முடியாமல் போனது. ஆனால் நாங்கள் அதற்கு எதிர்ப்பு இல்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஆதரவளிக்கின்றோம். அத்துடன் நாட்டில் 88, 89 காலப்பகுதியிலும் காணாமல் போனவர்கள் இருக்கின்றார். அதே போன்று 2000ஆம் ஆண்டில் காணாமல் போனவர்களும் இருக்கின்றார்கள்.

வடக்கிலும் இடம் பெற்றது. தெற்கிலும் இது இடம் பெற்றது. அதனால் இந்த சாபத்தை நாட்டில் இருந்து முற்றாக துடைதெரிந்து விடுவோம். அதற்காகத் தான் நாங்கள் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய காரியாலயம் அமைத்தோம்.

அதனால் நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்து அன்று இதற்கு தெரிவித்தாலும் நாங்கள் ஆதரவளிக்கின்றோம். ஆனால் அதன் தலைவரை மாற்ற வேண்டும். அவரால் முறையாக செயற்பட முடியாது. அவரை வைத்துக் கொண்டு காரியாலயத்தின் பணிகளை மேற்கொள்ள முடியாது என்றார்.

## சுமந்திரன் கேள்வி

விடுதலை புலிகள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என இராணுவத்தினரும், காணாமல் போனோர் என எவருமில்லை என காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளரும் குறிப்பிட்டுள்ளமை பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் ஆத்திரத்திற்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறான கருத்துக்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நீதியமைச்சரிடம் வலியுறுத்தினார்.



சபாநாயகர் தலைமையில் 08 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நீதியமைச்சு முன்னெடுத்த நடமாடும் சேவை வரவேற் கத்தக்கது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு புலம் பெயர்ந்துள்ளவர்களின் நலன் தொடர்பில் நீதியமைச்சர் கரிசணை கொண்டுள்ளமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சென்ற மேலும் 33 ஆயிரம் இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு வர எதிர்பார்த்துள்ளார்கள். பல்வேறு காரணிகளினால் அவர்கள் நாட்டுக்கு வருவது தாமதப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களை மீள் குடியமர்த்த நீதியமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

காணாமல் போனோர் என எவரும் கிடையாது என காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளமை அவதானத்திற்குரியது. காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வது தான் காணாமல் போனோர் அலுவலகத்தின் பொறுப்பாகும்.

அதனை விடுத்து விசாரணைகளை மேற் கொள்ளாமல், இறுதி தீர்மானத்தை எடுக்காமல் காணாமல் போனோர் என எவரும் கிடையாது என்று அவர் எவ்வாறு குறிப்பிட முடியும்.

விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளதாக தகவலறியும் சட்டத்தின் ஊடாக அறிக்கையிடப்படுத்தப்பட்டுள்ளது. (22ம்பக்கம்)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



– யாழ்.நகரில் இருந்து பகிரதன் –

பதினாறு வருடங்களாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர் ஒருவர் இலங்கை அரசின் இலக்கியத்துக்கான உயர் விருதைக் கடந்த வாரம் பெற்றுக் கொண்டார். சர்வதேசத்தின் கவனத்தை தனது பக்கம் இதன் மூலமாக அவர் ஈர்த்துக் கொண்டிருக்கின்றார். கடந்த வாரம் இது குறித்து உங்கள் அபிமான ஈழநாடு வெளியிட்டிருந்த செய்தியை கனடாவாழ் தமிழ் உறவுகள் படித்திருப்பீர்கள். இருந்தாலும், மேலதிகமான சில தகவல்களுடன் இந்த இது நம்ம யாழ்ப்பாணம் பகுதியில் இந்த வாரம் உங்களைச் சந்திக்கின்றேன்.

சிறை வாழ்க்கை என்பது மிகவும் கொடூரமானது. விரக்தியின் உச்ச நிலையில் தான் ஒருவரை அது வைத்திருக்கும். தனிமை என்பது விரக்தியையும், தேவையற்ற எண்ணங்களையும் தான் ஒருவரது மனதில் ஏற்படுத்தும். அதனால் தான் சிறைவாழ்க்கை என்பது ஒரு நரகம் போன்றது என்கிறார்கள்.

### விருது பெற்ற ஆதுரசாலை

இலங்கை அரசாங்கத்தின் இலக்கியத்துக்காக வருடாந்தம் வழங்கும் அரச சாஹித்ய விருது விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இவ்விழாவில் பல ஆளுமைமிக்க படைப்பாளர்கள் தமது படைப்புக்களுக்காக விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுச் சென்றார்கள். பெரும்பாலானவர்கள் வயதில் மூத்தவர்கள். அதாவது மூத்த படைப்பாளிகள். இவர்களில் இளைஞராகக் காப்பட்டவர் தான் ஆரூரன்.

பதினாறு வருடங்களாக சிறைவாசம் அனுபவக்கும் சிவ.ஆரூரன் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான அரச சாஹித்திய விருதைப் பெற்றுக் கொண்டார். அவர் எழுதிய ஆதுர சாலை என்ற நாவலே இந்த விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஆரூரன் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறை பட்டதாரி யாவார்



அவருக்கு அப்போது ஈடுபாடு இருக்கவில்லை. ஆனால், ஒரு கலை ரசியன். பாடசாலையில் படிக்கும் காலத்தில் கதைப் புத்தகங்களைப் படிப்பதற்குக் கூட அவரால் நேரத்தை ஒதுக்க முடியவில்லை. அந்தளவுக்குகு கல்வியில் ஈடுபாடாக இருந்துள்ளார்.

அதேவேளையில் இதில் மற்றொரு சாதனையும் உள்ளது. 2016ஆம் ஆண்டில் அரச சாஹித்திய விருதை இந்த நூல் பெற்றுக் கொண்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தான் அந்த விருதை வழங்கினார். ஆரூரன் சிறையில் இருந்தமையால், அவரின் சார்பாக தந்தை சிவலிங்கம் தான் விருதைப் பெற்றுக் கொண்டார்.

# சிறையில் பூத்த மலர்கள்

தன்னுடைய 26 ஆவது வயதில் பொறியியல் பட்டதாரியாக வெளியேறிய முனைப்பும் செயலுக்கமும் கொண்ட ஒரு இளைஞர் பதினாறு வருட கால சிறை வாழ்க்கையில் விருது பெற்ற இரண்டு நூல்கள் உட்பட எட்டு நூல்களை எழுதியிருக்கின்றார் என்பது வியக்க வைக்கின்றது. அதில் ஒன்று ஆங்கில மொழியிலான நூல் என்பது அவரது திறமைக்கும் ஆர்வத்துக்கும் மற்றொரு எடுத்துக்காட்டு.

சிறையிலிருந்து விருதைப் பெற்றுக் கொள்வதற்காக பொலிஸ் பாதுகாப்புடன் அவர் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அவரது பெற்றோரும் நிகழ்வைப் பார்ப்பதற்காக மண்டபத்துக்கு வந்திருந்தார்கள். இவரது தந்தை ஆ.சிவலிங்கம் ஓய்வு பெற்ற ஒரு விமானப் பொறியியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பெற்றோரின் உணர்ச்சி

### இலக்கிய ஆர்வம்

அப்படியானால் சிறைக்குச் சென்ற பின்னர் இலக்கியத்தில் ஆரூரனுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது? எட்டு நூல்களை எழுதி ஒன்றுக்கு விருது பெறும் அளவுக்கு இலக்கியத்தின் உச்சத்துக்கு ஆரூரன் சென்றது எப்படி? இதற்கு அவரது தந்தை பதிலளிக்கிறார்.

மகன் கைது செய்யப்பட்டு சிறையில்

தமிழில் எழுதத் தொடங்கிய ஆரூரன் பின்னர் ஆங்கிலத்திலும் எழுதத் தொடங்கினார். இதற்காக ஆங்கில அகராதி ஒன்று வேண்டும் என தந்தையிடம் கேட்டார். பின்னர் சிங்கள எழுத்தாளர்களின் ஆங்கில நாவல்களை வாங்கி வருமாறு கேட்டார். இந்திய எழுத்தாளர்களின் ஆங்கில நாவல்களையும் படிக்கப் போவதாகக் கேட்டார். அவற்றையும் தந்தை தேடி வாங்கிக் கொடுத்தார்.

### ஆங்கிலத்தில் அசத்தல்

சிறையிலுள்ள மகனின் மனநிலை பாதிப்

### சந்தேகத்தில் கைது

காலவரையறையற்ற சிறைவாழ்க்கையில் இதனை அவர் எவ்வாறு சாதித்தார்? உலகத் தலைவர்கள் பலர் தமது சிறை வாழ்க்கையில் நூல்களை எழுதியிருக்கின்றார்கள். அது போல நமது யாழ்ப்பாணத்து இளைஞன் ஒருவனும் வாழ வேண்டிய தமது இளமைக் காலத்தில் – பொறியியலாளராகி கலாநிதிப் பட்டம் பெற வேண்டும் என்ற கனவுடன் உழைத்த அந்த இளைஞன் வாழ்க்கையின் பல வருடங்களை சிறையில் தொலைத்து விட்ட நிலையில் இந்த சாதனையைப் புரிந்து தமிழ் மக்கள் அனைவரையும் தனது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஆரூரன் என்ற 42 வயதான இளைஞனே இந்த சாதனையைப் புரிந்திருக்கின்றார் 2006இல் கொழும்பு பித்தளைச் சந்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பயைடுத்தே சந்தேகத்தின் பேரில் கைதானவர் தான் ஆரூரன். இந்த சம்பவத்தில் அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ காயமடைந்திருந்தார்.

## இது நம்ம யாழ்ப்பாணம் 5

விருது விழா முடிவடைந்த பின்னர் தந்தை ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தந்தை தெரிவித்திருந்த தகவல்கள் அனைவது மனதையும் உருக்கக்கூடியவை. என்னுடைய மகன் கை விலங்கிடப்பட்டு பிடிக்கப்பட்ட போது எவ்வளவு வேதனை அடைந்தேனோ, அதற்கு எதிரானதும் சமமானதுமான சந்தோஷமான மன நிலையை எனது மகனின் நூலுக்கு சாஹித்திய விருது கிடைத்தது என்ற செய்தியை அறிந்த போது உணர்ந்தேன். எனது மனைவியின் மன நிலையும் அவ்வாறு தான் இருந்தது என இந்த செய்தியை அறிந்த போது தனக்கிருந்த மன நிலையை சிவலிங்கம் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆரூரன் இளமைக்காலத்தில் அல்லது பாடசாலைக் காலத்தில் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டிய ஒருவரல்ல. இவர் ஒரு கணித மாணவன். கணிதத்திலேயே

அதிக ஈடுபாடு காட்டினார் உயர் தரத்தில் படிக்கும் போது கணிதத்தையே தனது பிரதான பாடமாகத் தெரிவு செய்திருந்தார். இலக்கியத் துறையில்



சிறை வாழ்க்கையில் 2016 இல் முதல் தடவையாக இவர் இலங்கை அரசாங்கத்தின் விருதை தன்னுடைய நாவல் ஒன்றிற்காகப் பெற்றார். இப்போது இரண்டாவது விருதைப் பெற்றிருக்கின்றார்.

இருக்கும் போது, என்னுடைய வாழ்க்கை பெரும்பாலும் முடிந்து விட்டது அப்பா.... நான் என்ன செய்ய? எனக்கு இந்த வாழ்க்கை நரகமாக இருக்கின்றது. அதனை சொர்க்கமாக மாற்ற வேண்டும். அப்படியாயின் நான் ஏதாவது வாசிக்க வேண்டும். ஒரு வேலையும் இல்லாமல் சும்மா இருக்கின்றேன். நான் வாசிப்பதற்கு ஏதாவது வழி செய்யுங்கள் அப்பா என்ற என்னிடம் விரக்தியுடன் சொன்னார். அதன் பின்னர் உள்ளூர் வெளிநாட்டுப் படைப்பாளிகளின் பல நூல்களை தேடிச் சென்று வாங்கிக் கொடுத்தேன். அதன் பின்னரே அவருக்கு வாசிப்பு மீதான ஆர்வம் அதிகரித்தது. எழுத்துத் துறையில் அவர் ஈடுபடவும் அதுதான் காரணம்.

சிறையில் இருக்கும் எனது மகன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவரது மூளை பழுதாகி விடக்கூடாது என்ற கவலையில் தான் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என அவர் கேட்கும் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பேன். அதன் பின்னர் யாழிசை என்ற தனது முதலாவது நாவலை அவர் எழுதினார் அதனை ஜீவநதி பதிப்பகம் வெளியிட்டது. இவ்வாறு தனது மகன் இலக்கியத்துக்குள் எவ்வாறு வந்தான் என்பதை தந்தை உணர்ச்சியுடன் விபரித்தார்.

### விற்பனையில் சாதனை

இதில் ஆச்சரியம் என்னவென்றால், யாழிசை நாவல் முதலாவது பிரதி இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. அவ்வளவும் விற்றுத் தீர்ந்து விட்ட நிலையில் இரண்டாவது பதிப்புக்கும் சென்றது. ஆரூரனின் முதலாவது நாவலுக்கே இந்தளவு வரவேற்பு இருந்தது. இலங்கையில், பிரபல எழுத்தாளர்களின் நாவல்களே 500 பிரதிகள் தான் அச்சிடப்படும் நிலையில் ஆரூரனின் முதலாவது நாவலே இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன.

படையக் கூடாது என்பதில் தந்தை கவனமாக இருந்தார். நரகமான சிறைக் கூடத்தை வாசிப்பின் மூலமாக சொர்க்கமாக மாற்றப் போவதாக மகன் சொன்னது தான் தந்தையின் மனதை ஆக்கிரமித்திருந்தது.

எதற்காக ஆங்கில நாவல்களைப் படிக்கிறாய்? என்று சிறைக்குச் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தந்தை கேட்டிருக்கின்றார். தான் ஒரு நாள் ஆங்கிலத்தில் நாவல்களை எழதப் போவதாகவும், அதற்காகவே ஆங்கில நாவல்களில் எழுத்து நடைகள் என்பன எவ்வாறுள்ளன என்பதை அவதானிப்பதற்காகவே ஆங்கில நாவல்களைப் படிப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

சில மாதங்களுக்குள்ளாகவே **The Innocent Victim** என்ற பெயரில் ஆங்கில நாவல் ஒன்றையும் சிறைக்குள் இருந்தவாறே எழுதி அசத்தியிருக்கின்றார். ஆரூரன். அந்த நாவல் பத்து வயதில் மகன் உள்ள ஒரு விதவைத் தாயின் கதை. அந்த விதவைத் தாய் மறுமணம் செய்து கொள்வது தொடர்பான கருவை இந்த நாவலில் அவர் கையாண்டுள்ளார். இதனூடாக விதவைகளின் மறுமணம் குறித்து அவர் பேசியுள்ளார்.

சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டு எழுதுவதென்பது சாதாரணமானதல்ல. சக கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் ஒத்துழைப்பு அவசியம். நிலத்தில் இருந்து கொண்டு தான் எழுத வேண்டும். கதிரைகளோ மேசைகளோ இல்லை.

இந்த நிலையில், அவரது வாழ்க்கை சிறைச்சாலைக்குள் முடக்கப்பட்டு விட்ட போதிலும், அயராது ஊக்கத்துடன் எழுதுகின்றார். மண்ணின் மீதும், மக்களின் மீதும் அவரது பற்றுதல் தான் அவரது இந்த முனைப்புக்கு காரணம். ஈழத்து இலக்கிய உலகம் அவரிடமிருந்து மேலும் பல படைப்புக்களை எதிர்பார்க்கலாம்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

05 நவம்பர் 2022 முதல் 11 நவம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அரியதுரை சரஸ்வதி

யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளுக்காக 12 நவம்பர் 2022 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு கார்த்திகேசு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு கார்த்திகேசு அவர்களின் 21வது ஆண்டு நினைவு நாள் 05 நவம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு கார்த்திகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். கள். திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## பிறந்த நாள் நினைவாக



### திரு முத்தையா நாகலிங்கம்
### திருமதி மகாலெட்சுமி முத்தையா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர்கள் திரு முத்தையா நாகலிங்கம் அவர்களதும் திருமதி மகாலெட்சுமி முத்தையா அவர்களதும் பிறந்த நாள் நினைவாக அவரது குடும்பத்தினர் 10 நவம்பர் 2022 வியாழக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 நவம்பர் 2022 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு கார்த்திகேசு அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜெகேந்திரன் வதனி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆரியனின் இரண்டாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஆரியன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



09 நவம்பர் 2022 புதன்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு தங்கராஜா ஹரிச்சந்திரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு தங்கராஜா ஹரிச்சந்திரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 நவம்பர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர்கள் திரு முத்தையா நாகலிங்கம் அவர்களதும் திருமதி மகாலெட்சுமி முத்தையா அவர்களதும் பிறந்த நாள் நினைவாக அவர்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்தியின் ஆறாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்தி தனது பெற்றோர்கள் தங்கை ஜெனனியுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



# “சாதனைப் பெண்மணி” திருமதி வரதா சண்முகநாதனுக்கு கனடா வாழ் வேலணை உறவுகளின் மகத்தான பாராட்டு விழா

























கடந்த 29 ஒக்டாபர் 2022 சனிக்கிழமை ஸ்காபரொவில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தின் அரங்கில் நடைபெற்ற சாதனைப் பெண்மணி திருமதி வரதா சண்முகநாதன் அவர்களுக்கு கனடா வாழ் வேலணை உறவுகள் நடத்திய மகத்தான பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சாதனைப் பெண்மணி திருமதி வரதா சண்முகநாதன் அவர்கள் இலங்கையில் ஓர் ஆசிரியை ஆவார். கடந்த வருடம் கனடாவில் உள்ள மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஜோர்க் பல்கலைகழகத்தில் தனது 86வது வயதில் முதுமானிப் பட்டத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இளைய சமுதாயம் கல்வியில் சாதனைகளைப் படைக்க வேண்டும். கல்வி கற்பதற்கு வயது எல்லை இல்லை என்பதை தமிழர்களுக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே வழிகாட்டியாக விளங்கி வருகின்ற அவர் பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி வாழ வேண்டும் என வாழ்த்துவதோடு அவரைப் பாராட்டி மகிழ்ந்த அனைவருக்கும் நன்றிகள். போட்டோ ஐயா 4 யூ

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை


ஈழமுரசு
தலைவன் பிறந்தநாள் அதுவே தமிழன் நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத வீரம் மண்டியிடாத மானம்
ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும் பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்
68
அகவை விழா
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
மாபெரும் எழுச்சி விழா
2022
நவம்பர்
26
சனிக்கிழமை
மாலை 5 மணி
இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவரிற்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புகளுக்கு: (647) 657 8566, (647) 783 3466




# ஒரு நினைவு நூல் வெளியீடும் அதன் அரசியலும்

யாழ்ப்பாணம், வலம்புரி நட்சத்திர விடுதியில் கடந்த சனிக்கிழமை ஒரு நிகழ்வு இடம் பெற்றது. அது ஒரு நினைவு கூர்தலாகவும் இருந்தது. அதே சமயம் அதில் ஓர் அரசியலும் இருந்தது. ஓராண்டுக்கு முன் கொழும்பில் உயர் நீர்த்த திருமதி கௌரி தவராசாவை நினைவு கூர்ந்து அவருடைய நினைவு நூலை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு அது.

திருமதி கௌரி தவராசா நாடறிந்த ஒரு வழக்கறிஞர். அவரும் அவருடைய கணவனும் ஒன்றாகச் சேர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அகப்பட்டவர்கள் பலரை விடுவித்திருக்கிறார்கள். தமிழ் சட்டத்துறைப் பரப்பில் குறிப்பாக தலைநகரில் துருத்திக் கொண்டு மேலெழுந்த ஒரு பெண் ஆளுமையாக அவரைக் கூறலாம். அது போலவே தமிழ்ப் பரப்பில் பெருந்தொற்று நோய் காவு கொண்ட ஒரு முக்கிய பெண் ஆளுமையாக அவரைக் கூறலாம். தமிழ் சட்டத்துறையில் இப்பொழுது பெண்கள் அதிகமாக வருகிறார்கள். எனினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை பிரதிநிதித்துவப் படுத்தியவர்களில் திருமதி கௌரி சங்கரி முக்கியமானவர்.

இலங்கைத்தீவு பிரித்தானியரிடமிருந்து விடுபட்ட பின்னரான கடந்த சுமார் ஏழு தசாப்த காலத்தில் ஒப்பிட்டளவில் அதிக காலம் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற அசாதாரண சட்டங்களின் கீழ்தான் ஆளப்பட்டு வருக்கிறது. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையம் தொகுத்த ஒரு நூல் உண்டு. இந்த ஆங்கில நூல் சட்டத்துறை வல்லுநர்களின் கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். இந்நூலின் முன்னுரையில் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட எழுதிய முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்..1947 ஆம் ஆண்டிலிருந்து சிறிய இடைவெளிகளைத் தவிர்த்துப் பார்த்தால் இலங்கை தீவில் அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்ச்சியாக அமுல் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இந்த அடிப்படையில் பார்த்தால் அசாதாரண சட்டமே சாதாரண சட்டமாக பயிலப்படும் ஒரு நிலைமையை காணலாம். இதனால் சாதாரண சட்டங்களும் அசாதாரண சட்டங்கள் போல செயலாற்றும் ஒரு நிலைமையையும் காணலாம்.

அது தான் உண்மை. தமிழ் மக்கள் மத்தியில் சாதாரண உரையாடல்களில் ஒரு பொருளின் அல்லது ஒரு சம்பவத்தின் சிறப்பை கூறுவதற்கு ஒரு வார்த்தை பயன்படுத்தப்படுவதுண்டு. சட்டப்படி இங்கு சட்டப்படி என்ற வார்த்தை சட்ட ரீதியிலான பரிமாணத்தில் பயன்படுத்தப்படவில்லை. மாறாக குறிப்பிட்ட பொருள் அல்லது குறிப்பிட்ட சம்பவத்தின் தரச் சிறப்பை கூறுவதற்கு அது பயன்படுத்தப் படுகிறது. அம்சமானது அல்லது சிறந்தது என்ற பொருளில் தான் அந்த வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் கடந்த சுமார் 7 தசாப்தகால தமிழ் அரசியல் அனுபவத்தை தொகுத்துப் பார்த்தால்.சட்டப்படி என்பது ஒரு நல்ல வார்த்தை அல்ல.அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், தனிமைப் படுத்தல் சட்டம் முதலாக பெரும்பாலான சட்டங்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை ஒடுக்கும் கருவிகளாகத் தான் நடைமுறையில் உள்ளன.

மேற்கத்திய ஜனநாயகப் பரப்புகளில் ஓர் அரசைக் கட்டமைக்கும் மூன்று முக்கிய தூண்களான சட்டவாக்கத்துறை, (அல்லது அரசாங்கம்). நீதிபதிபாலனத்துறை, படைத்தரப்பு ஆகிய மூன்றுக்கும் இடையே வலு வேறாக்கம் உண்டு. அதாவது ஒவ்வொரு பிரிவும் அதற்குரிய சுயாதீனத்தோடு இயங்க முடியும் என்று பொருள். ஆனால் இலங்கைத்தீவில் தமிழ் அனுபவம் அதுவல்ல. ஜனநாயக செழிப்பு மிக்க அரசியல் பரப்புகளில் வலு வேறாக்கம் பிரயோகத்தில் உண்டு. ஆனால் இலங்கை தீவில் இருப்பது இன நாயகம் தான். எனவே ஜனநாயக இதயம் செழிப்பாக இராத நாடுகளில் சட்டவாக்கத் துறை, நீதிபரிபாலனத்துறை, பாதுகாப்புத் துறை ஆகிய மூன்றுக்கும் இடையே வலுவேறாக்கம் இருக்காது. மாறாக அங்கு அரசின் கொள்கை எதுவோ அதை அமுல்படுத்தும் உபகரணங்களாகவே நீதிபதிபாலனத் துறையும் படைத்துறையும் இயங்கும். இதை சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பானது அதன் ஒடுக்கும் தேவைகளுக்காக சட்டங்களை உருவாக்கும். அதை நீதிபதிபாலனத் துறையும் படைத்துறையும் அமலபடுத்தும். இங்கு சட்டம் எனப்படுவது ஒடுக்குமுறையின் ஒரு கருவியாகத்தான் பிரயோகத்தில் உண்டு.அரசின் கொள்கை ஒடுக்குமுறையாக இருந்தால் சட்டம் அதன் கருவியாக செயல்படும் என்பதே பிரயோக தர்க்கம் ஆகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒடுக்குமுறையை வெளிப்படையாக முன்னெடுப்பது பெருமளவுக்கு அரச படைகள் தான். படைத்தரப்பு அரசின் உபகரணங்களில் ஒன்று தான். அது போலவே திணைக்களங்களும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள் தான். 2009க்கு பின் அரச திணைக்களங்கள் ஏதோ ஒரு விதத்தில் சிங்கள பௌத்த அரசுக் கொள்கையை முன்னெடுத்து வருகின்றன. உதாரணமாக வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், நில அளவை திணைக்களம், கனிமவியல் திணைக்களம், கடத் தொழில் திணைக்களம் போன்றவற்றை இங்கு சுட்டிக் காட்டலாம். அதாவது அரசு திணைக்களங்கள் எனப்படுகின்றவை அரசின் உபகரணங்கள் தான். அவை அரசுக் கொள்கையை அமல்படுத்தும் உபகரணங்களே. அரசின் கொள்கை ஒடுக்குமுறையாக இருக்குமிடத்து அரசு திணைக்களங்களும் ஒடுக்கு முறையின் கருவிகளாகவே செயல்படும்.

இப்படிப்பட்டதோர் வரலாற்று பின்னணியில் பயங்கரவாத தடைச் சட்டம் மட்டும் தான் தமிழ் மக்களை ஒடுக்கியது என்பதல்ல, அண்மை ஆண்டுகளில் பெரும் தொற்று நோய்க் காலத்தில் தனிமைப்படுத்தற் சட்டத்தையும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தியதை இங்கு நினைவுட்டலாம். நினைவு கூர்தலுக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகளை அவர்கள் கைது செய்ய முற்பட்ட பொழுது தனிமைப்படுதல் சட்டத்தை ஒடுக்கும் சட்டமாக அவர்கள் பயன்படுத்தினார்கள். அது போலவே சில வாரங்களுக்கு முன் உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியகச் சட்டமூலமும் ஒடுக்கும் நோக்கத்தைக் கொண்டது தான்.

அதாவது தொகுத்துக் கூறின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு தமிழ் மக்களையும் தனக்கு எதிராகப் போராடுகின்றவர்களையும் ஒடுக்குவதற்கு ஒரு சட்டம் தேவைப்படுகிறது. அது பயங்கரவாத தடைச் சட்டமாகவோ, திருத்தி அமைக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமாகவோ,அவசரகாலச் சட்டமாகவோ, அல்லது தனிமைப்படுத்தல் சட்டமாகவோ அல்லது புனர்வாழ்வு பணியகச் சட்ட மூலமாகவோ இருக்கலாம்.

இவ்வாறான ஒரு சட்டப் பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்து பார்க்கும் பொழுதே தமிழ் சட்டப்பரப்பில் தவராசா கௌரி தம்பதிக்கு உள்ள முக்கியத்துவத்தை கணிப்பிடலாம். அவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடை சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப் படுத்தி வென்றெடுத்த வழக்குகளைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய நினைவு நூல் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப் பட்டது.

அந்த வழக்குகளின் விபரங்களை படிக்கும் எவரும் பயங்கரவாத தடைச் சட்டம் தமிழ் மக்களை எவ்வாறு ஒடுக்கியது, இப்பொழுதும் ஒடுக்குகிறது என்பதனை கண்டுபிடிக்கலாம். அதுமட்டுமல்ல கௌரி சங்கரி மனித உரிமைகள் என்ற விடயத்தில் மூன்று இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பதனையும் அந்த நூல் நமக்கு காட்டுகிறது.

இது அந்த நூலுக்குரிய முக்கியத்துவம். இதைவிட அந்த நினைவுநூல் வெளியீட்டு நிகழ்வுக்கு வேறு ஒரு முக்கியத்துவம் உண்டு.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

என்னவெனில், நிகழ்வில் தமிழ்த் தேசியப் பரப்புக்குள் நிற்கும் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் கஜேந்திரகுமார் ஆகியோரைத்தவிர அவர்களுடைய கட்சிகளை சேர்ந்த ஏனைய பெரும்பாலான உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று வடக்கு-கிழக்கில் பெரும்பாலான மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளை அங்கே காண முடிந்தது. அண்மை ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் ஒரு நிகழ்வில் ஒன்றாகக் காணப்பட்டமை என்பது அசாதாரணமானது.

அந்த அடிப்படையில் அந்த நிகழ்வுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. நிகழ்வின் முடிவில் கௌரி சங்கரியின் கணவர் தவராசா ஆற்றிய உரை உணர்சிகரமாக இருந்தது. அதேசமயம் அதில் ஓர் அரசியல் செய்தியும் இருந்தது. அதாவது அது ஒரு நினைவு கூர்தல் நிகழ்வு மட்டுமல்ல, அதன் மூலம் ஏதோ ஒரு தரப்புக்கு ஏதோ ஒரு அரசியல் செய்தியை உணர்த்தும் உள்நோக்கமும் அதில் இருந்ததா?

அதே சமயம் அந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு அடுத்த நாள், கௌரிசங்கரியின் கணவரும் தமிழரசுக் கட்சியின் கொழுப்புக் கிளை முக்கியஸ்தருமான தவறாசா ஓர் ஊடகச் சந்திப்பை நடத்தியிருந்தார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரனுக்கு எதிரானவைகளாகக் காணப்பட்டன.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் சுமந்திரனுக்கு எதிராக கருத்துத் தெரிவித்திருக்கும் ஒரு பின்னணியில் கட்சியின் கொழும்புக் கிளை முக்கியஸ்தரான தவராசா தெரிவித்த கருத்துக்களையும் தொகுத்து பார்க்கும் பொழுது கூட்டமைப்புக்குள் உட்கட்சி பூசல்கள் புதிய வடிவத்தை அடைகின்றனவா என்ற கேள்வி எழுகிறது.

ஒருபுறம் பெருந்தொற்று நோயினால் காவு கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பெண் ஆளுமையை நினைவுகூரும் நிகழ்வில் எல்லா கட்சிகாரர்களும் ஒன்றாக காணப் பட்டார்கள்.

இன்னொருபுறம் அந்நிகழ்வின் பின் நடந்த ஊடகச் சந்திப்பில் தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் இருப்பவற்றில் பெரிய கட்சியான கூட்டமைப்பு ஓர் இறுக்கமான கட்டமைப்பாக இல்லை என்பதை தமிழ் மக்களுக்கு உணர்த்தின. கடந்த வார இறுதியில் தமிழ் மக்களுக்கு கிடைத்த இரண்டு முரணான செய்திகள் அவை.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

# தமிழர் தாயகத்தில் அடையாள அழிப்பு:- சிறுதெய்வ வழிபாட்டை அழிக்கும் ஐயர்கள்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடைய தெருவில் இருந்த முத்துமாரி, ஒரே நாளில் ராஜராஜேஸ்வரியாகி விட்டார். ராஜராஜேஸ்வரியாகியதோடு சினிமாவில் நடப்பதைப் போல எல்லாமே மாறி விட்டன. புனருத்தாரணம் அமர்க்களமாகியது.

இருப்பிட வசதி கூடியது. பொங்கலும் படையலும் பொலியத் தொடங்கின. காலை, மதியம், மாலையும் என முக்காலப் பூ சையும் பாராயணமும் நடக்கிறது. ஆட்கள் கூடுகிறார்கள். ஆடலும் பாடலுமென ஒரே கொண்டாட்டமாகியது சூழல். போதாக்குறைக்கு அந்த நாள், இந்த நாள் என்று விசேட பூசைகளும் ஆராதனைகளும்.

முத்துமாரியாக இருந்தபோது, ஐம்பது ஆண்டுகளாக ஒரு சின்னஞ் சிறிய கொட்டகையில் தான் இருக்க வேண்டியிருந்தது. தினம் ஒரு வேளை மட்டுமே ஒரு பூசை. எப்போதாவது ஒரு விசேசம் நடக்கும். அதுவும் சொல்லக் கூடிய அளவுக்குக் கொண்டாட்டமாக இருக்காது. அவரவராகவே வந்து, பொங்கிப் படைத்து, உண்டு, முடித்துச் செல்வார்கள். சிறிய வேண்டுதல்கள், பெரிய உருக்கம். ஆனாலும் ஒரு நெருக்கம் இருந்தது.

இப்பொழுது ராஜராஜேஸ்வரியோ, மிக விசாலமான இருப்பிடத்தில் சகல ஐஸ்வரியங்களோடும் அமர்ந்திருக்கிறார்.

இதைச் சரியாகச் சொல்ல வேண்டும். முத்துமாரி ராஜராஜேஸ்வரி ஆகினார் என்பதை விட ராஜராஜேஸ்வரி ஆக்கப்பட்டார் என்று சொல்வதே சரியாகும். அதைப் போலவே, ராஜராஜேஸ்வரி சகல ஐஸ்வரியங்களோடும் அமரவில்லை. அமர்த்தப்பட்டிருக்கிறார். எல்லாமே மிகக் கச்சிதமாகச் செய்யப்பட்டுள்ளன.

இது எப்படி நடந்தது என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கக் கூடும். அது தொழில் ரகசியம். வேறொன்றுமில்லை. சனங்களுடைய அறிவின்மையைப் பயன்படுத்தி ஒரு சாரார் இதைச் செய்திருக்கிறார்கள். சரியாகச் சொன்னால் சனங்களின் மூடத்தனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

சினிமாவில் விஜயலட்சுமி, ஸ்மிதாவாக்கப்பட்ட பிறகு புகழும் வாய்ப்பும் கூடியதைப் போல அல்லது அனு என்பவர் திரிஷா என்றாக்கப்பட்டதுக்குப் பிறகு புகழும் வசதியும் அதிகரித்த மாதிரி அல்லது மரியா என்ற பெண் நயன்தாரா எனவாக்கப்பட்டதற்குப் பின் பெருமைகளும் சிறப்பும் கூடியதைப் போல முத்துமாரியும் ராஜராஜேஸ்வரியாக்கப்பட்ட பிறகு கொடி பறக்கத் தொடங்கியது.

ஆமாம் எல்லாமே தொழிலுக்காகத்தான். கோயில் பராமரிப்பையும் பூசைகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வதற்காக பிராமணர்களால் செய்யப்பட்ட தந்திரம் இது. உண்மையில் இது ஒரு அடையாள அழிப்பாகும். சிறு தெய்வ வழிபாட்டை அழித்துப் பெருந்தெய்வப் பண்பாட்டுக்குள் மக்களைத் தள்ளுவதாகும். இதைப் பற்றிய ஒரு கதையை த.கலாமணி வெளிச்சம் இதழில் வல்லமை தாராயோ! என்ற தலைப்பில் 25 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார். அண்ணமார் தெய்வத்தை பிள்ளையாராக மாற்றப்படுவதே அந்தக் கதையாகும். இதேபோல ஜெயமோகனும் ஒரு கதையை எழுதியிருக்கிறார். மாடன் மோட்சம் என்ற தலைப்பில். மாடன் என்ற சிறுதெய்வம், பெருந்தெய்வமாக்கப்படுவதன் அரசியலை மிகுந்த அங்கதத்துடன் எழுதியிருக்கிறார் ஜெயமோகன். எல்லாமே அரசியல் தான். பொருளாதார நலனுக்கான அரசியல். நாம் இன அழிப்பைப் பற்றி, அடையாள அழிப்பைப்பற்றி, பண்பாட்டு அழிப்பைப்பற்றிப் பேசுகிறோம். அப்படியான அழிப்புகள் பல தரப்பாலும் பல வழிகளிலும் நடக்கின்றன. இந்த அழிப்பில் தனியே அரசாங்கம் தான் ஈடுபடுகிறது என்றில்லை. அல்லது சிங்களத் தரப்புத் தான் செய்கிறது என்று சொல்ல முடியாது. இதை இந்த மாதிரி சாதியாதிக்கச் சக்திகளும் செய்கின்றன. சில அடையாள அழிப்புகள் இனத்தில் பேரால் நடக்கிறது. சில மொழியின் பேரால். இது மதத்தின் பேரால்.



இங்கே நடப்பது மதத்தின் பேரால் நிகழ்கிறது —நிகழ்த்தப்படுகிறது. சனங்களுக்கு ஆகம விதிகள் தெரியாது. லேசில் தத்துவம் புரியாது. எல்லோருக்கும் உபநிடதங்களில் பயிற்சியோ அறிவோ இல்லை. இந்து நாகரீகத்தை அல்லது இந்து சமயத்தை ஒரு பாடமாக பல்கலைக் கழகங்களில் ஆண்டு தோறும் படித்துப் பலர் வெளியேறுகிறார்கள். இந்தத் துறையில் படித்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலர் உள்ளனர். இதை விட சமய அறிஞர்களாக, பெரியோர்களாகப் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இருந்தாலும் எவரும் இந்த அடையாள அழிப்பைப் பற்றிப் பேசுவதுமில்லை. இதைக் கண்டிப்பதுமில்லை.

ஐயரை எப்படிக் கேள்வி கேட்கலாம்? என்பதே எல்லோருடைய தயக்கமுமாகும். ஐயர் ஒன்றும் கடவுளல்ல. நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று சிவனைப் பார்த்து நக்கீரன் கேள்வி கேட்டதாகப் படித்திருக்கிறோம். நாமார்க்கும் குடியல்லோம். நமனையும் அஞ்சோம்'' என்ற திருநாவுக்கரசர் சொன்னதாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால், நாம் மட்டும் நமக்குத் தெரிந்த அநீதிக்கே அடையாள அழிப்புக்கே குரல் கொடுக்க முடியாமல் தடுமாறுகிறோம். ஒரு தெய்வத்தின் அடையாளத்தை மறைத்து, அழித்து இன்னொரு தெய்வமாக்கப்படுவதைப் பற்றிக் கேள்வி கேட்கத் தயங்குகிறோம்.

இது ஏன்?

எங்களுடைய தெருவில் மட்டும் முத்துமாரி அம்மன் என்ற சிறு தெய்வம் அழிக்கப்படவில்லை. வற்றாப் பளையில், மாத்தளையில், புளியம் பொக்கணையில், புதூரில், இயக்கச்சியில்.... எனப் பல இடங்களிலும் இத்தகைய அடையாள அழிப்புகள் நடந்துள்ளன. இன்னும் பல இடங்களில் தொடர்ந்தும் நடக்கின்றன.

தெய்வத்தையே மாற்றி விடுகிறார்கள் என்றால் அவர்கள் எப்படியான பேர் வழிகளாக இருப்பர்? வரலாற்றில் இப்படிப் பல அடையாள அழிப்புகள் நடந்துள்ளன. வட இந்தியாவில் ராமர் கோயிலை அழித்து பாபர் மசுதி கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. நல்லூரில் மசுதியை உடைத்தே கந்தசாமி கோயில் கட்டப்பட்டதாகச் சொல்வோருண்டு. கந்தசாமி கோயில் இருந்த இடத்தில் முத்திரைச் சந்தையில் கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டுள்ளது என்ற தகவல்களும் உள்ளது. சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் இப்பொழுது பௌத்த விஹாரைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் நடப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

இதெல்லாம் வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளின் விளைவுகள். ஆனால், நம்முடைய சூழலில் சத்தமில்லாமல் நடக்கிற நடத்தப்படுகிற அடையாள அழிப்புக்கு என்ன பெயர்? இதுவும் அரசியல்தான்.

சிறுதெய்வ வழிபாட்டை அழித்து விட்டால், அந்த வழிபாட்டை மேற்கொண்ட சமூகத்தின் பண்பாட்டு வேரைச் சிதைத்து விடலாம். சிறு தெய்வ வழிபாடு என்பது ஏறக்குறைய சுதந்திரமானது. மக்கள் நேரடியாகவே தாங்கள் வழிபடுகின்ற கடவுளுடன் தெய்வத்துடன் தொடர்புறுவர். அவர்களே அந்தத் தெய்வத்துக்கு பூசை செய்வர். அவர்களே அதைப் பராமரிப்பர். அவர்களே பொங்கிப் படைப்பர். அங்கே இடைத்தரகருக்கு இடமேயில்லை. இடைத்தரகருக்கு எதையும் தட்சிணையாகக் கொடுக்க வேண்டியதுமில்லை. தாங்கள் வெளியே நின்று விதிக்கப்படும் கட்டளைகளுக்குப் பணிய வேண்டியதுமில்லை.

சிறு தெய்வ வழிபாடென்பது, வழிபடும் பக்தருக்கும் கடவுளுக்கும் இடையில் தொடரும் மிக நெருக்கமான உறவை அடிப்படையாகக் கொண்டது. உலகத்திலுள்ள பெரும்பாலான மக்களின், மனநிலை, வாழ்க்கை, பொருளாதாரம், அரசியல் என்பற்றை ஆட்டிப் படைக்கும் இந்தப் 'பெரு தெய்வ வழிபாடுகள்' சிறு தெய்வ வழிபாடுகளிலிருந்து மருவியது என்கிறார்கள் ஆய்வாளர்கள். இதைத் தான் கண்ணுக்குத் தெரியாத அரசியல் (**Invisible Politics**) என்கிறோம். தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறு தெய்வவழிபாடு என்பது, சிறு தெய்வங்களை வணங்கும் மக்கள், அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பாடுகிறார்கள். தெரிந்த கலைத்துவத்தை ஆடலாகவும் பாடலாகவும் சமர்ப்பிக்கிறார்கள். தாங்கள் உண்ணும் உணவை, உபயமாகக் கொடுக்கிறார்கள். தங்கள் பிரச்சினையைச் சொல்லி 'குற்றத்தையும்' சிலவேளைகளில், 'தண்டனையையும்' ஒப்புக் கொள்கிறார்கள். இந்தச் சடங்கு, உரு ஆடுதல், கட்டுச் சொல்லுதல்' போன்றவையாகப் பரிணமிக்கும்.

இந்திய, இலங்கைத் தமிழர்களிடையே உள்ள சிறு தெய்வ வழிபாடுகள், குலதெய்வ வழிபாடுகள், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, காவற் தெய்வ வழிபாடு, எல்லைகத் தெய்வ வழிபாடுகள் என்று பல விதத்தில் அழைக்கப்படுகின்றன.

தமிழர்களின் சிறு தெய்வ வழிபாட்டு முறைகள், தனித்துவமானவை. இயற்கையின் தத்துவங்களைப் பிரதிபலிப்பவை. மனிதத்தின் மாண்புகளைப் போற்றுபவை. முன்னோர்களுடைய வழிபாட்டின் நீட்சியாகவிருப்பவை. தனது சமூகத்தின் பூர்வீகத்தின் புனிதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை.

இந்தத் தெய்வங்கள் ஒரு காலத்தில் அந்தக் கிராமத்து மக்களின் முன்னோராகும். தங்களுக்கு நன்மை செய்த தலைவனை வணங்கிய, தங்களுக்காகப் போராடி உயிர் நீத்த வீரர்களை வழிபட்ட, பெண்களுக்காகப் போராடிய பெண்களைத் தெய்வமாக்கிய தமிழரின் அடிவேர்களாகும். இவர்கள் கற்பனையல்ல. கட்டுக்கதைகள் அல்ல. இதிகாசத் திரிபுகள் அல்ல. இந்த வழிபாட்டு முறை அறம் சார்ந்த பாரம்பரியத்தைக் கொண்டது. சிறு தெய்வ வழிபாடு, தென் இந்தியாவுக்கு, ஜைனம், பௌத்தம், பிராமணியம் உள்ளிட்ட முதலே கி.மு. 8ம், 4ம், 4ம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே பரந்திருந்த வழிபாட்டு முறையாகும்.

இதைப் பற்றிய விரிவாக ஆய்வுகள் பலவும் நடத்தப்பட்டுள்ளன. இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆரிய உள்ளீடு தமிழகத்தில் வந்ததால் சிறு தெய்வங்கள் 'தீண்டத்தகாத' கடவுளர்கள் ஆயின. அத்துடன் சில சிறு தெய்வ வழிபாட்டுத் தெய்வங்கள் பெரு தெய்வங்களாக உருமாற்றம் செய்யப்பட்டன. பல்லாயிரம் ஆண்டுகள் பெயரும் புகழும் பெற்று வாழ்ந்த நாகரீகத்தையுடைய தமிழ் இனம், ஆரியரின் வருகையால் பெருமாற்றங்களைக் கண்டது.

தமிழர்கள் அவர்கள் செய்யும் தொழில் முறையில் சாதி முறையில் பிரிக்கப்பட்டார்கள். பெரிய சாதிக்கடவுளர்கள் புதிதாக உருவாக்கப்பட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் ஆண்களாக விருந்தார்கள். வழிபாட்டு முறைகள் பிராமணயத்தின் முறையில் நகர்த்தப்பட்டன. அர்ச்சனை, விசேட பூஜைகள் என்று புதிய 'வழிபாட்டு' முறைகள். உருவெடுத்தது'' என்கிறார் இது தொடர்பாக ஆய்வு செய்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். இது தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் இது பன்மைத்துவத்தை நிராகரிக்கும் செயலாகும். மக்களின் உரிமை மீறல்களில் இதுவும் ஒன்றாகும்.

மக்களுடைய வழிபாடுகள் பல வகையாக உள்ளன என்பதை நாம் அறிய வேண்டும். சமூக அடுக்குகள் எப்படிப் பல வகையாக இருந்தனவோ அதற்கமைய வழிபாடுகள் இருந்ததும் உண்டு. வீட்டுத் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத் தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு எனப் பல வகைப்படுகின்றன.

(20ம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலயம்:- தெற்கில் உரிமை மீறல்! வடக்கு கிழக்கில் உரிமையாக்கல்?



கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -

உயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் செய்யப்பட்ட பிரகடனத்தை ஒரு மாதத்தில் அவரே நீக்க வேண்டியேற்பட்டது. அதனால் அந்தப் பிரகடனம் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான அழுத்தம் தென்பகுதியில் எழுந்ததே காரணமாகும். இதைச் செய்தவர்கள் சிங்கள உயர் குழாத்தினர். சட்டம் மற்றும் அறிவியல் துறைகளில் இருந்தோர்.

இவ்வாறே அரகலய போராட்டத்தில் இணைந்திருந்தோரின் கைதுகளுக்கு எதிரான குரலும் கண்டனமும் தென்னிலங்கையில் பலமாக எழுந்துள்ளது. இதன் காரணமாகவே சிறைப் பிடிக்கப்பட்ட அரகலயவினர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் விடுவிக்கப்படுகின்றனர். பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டாலும் சிறை நீடிக்கப்படவில்லை.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த மாதிரியான (ஜனநாயகச் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும்) நடவடிக்கைகளை சர்வதேச சமூகமும் எதிர்க்கிறது. கண்டனம் செய்கிறது. இதுவும் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறது. ஆனால், இதே நிலைமை — இதே பிரச்சினைகள் வடக்கிலும் கிழக்கிலும் உண்டு.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொது மக்களின் காணிகள், வாழிடங்கள், தொழில் மையங்கள் உட்படப் பல இடங்கள் பல ஆண்டுகளாக உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

பலாலி, மயிலிட்டி, கட்டுவன், காங்கேசன் துறை, வடமராட்சி கிழக்கு, தீவுப் பிரதேசத்தில் பல இடங்கள், இயக்கச்சியில் பல பகுதிகள், கிளிநொச்சி நகரத்தில் பல இடங்கள், வட்டக்கச்சி, முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான், கேப்பாபிலவு, மாங்குளம் பிரதேசத்தில் பெருமளவு பகுதி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு என எல்லா மாவட்டங்களிலும் இந்த அத்துமீறல் உண்டு.

மக்களுடையதும் அரசினதும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் படைகளின் முகாம்களாகவும் தளங்களாகவும் நீடிக்கின்றன. கீரிமலை காங்கேசன் துறை பிரதான வீதி உள்பட பல பிரதான வீதிகள் படைத்தரப்பினால் மூடப்பட்டுள்ளன. இதில் கீரிமலை காங்கேசன்துறை பிரதான வீதியானது காங்கேசன் துறைமுகத்துக்கானதாகும். திருகோணமலையிலும் இவ்வாறான தடைப் பிரதேசங்கள் உண்டு.

இதற்கு எதிராக பாராளுமன்றத்திலும் வெளியே மக்களாலும் மக்கள் அமைப்புகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்புகளாலும் கண்டனம் செய்யப்பட்டுள்ளது. எதிர்ப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் அரசாங்கம் அதையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை. மசியவும் இல்லை.

இதனால் வடக்குக் கிழக்கில் தொடர்ச்சியாகப் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அவர்களுடைய அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்பாடல் மட்டுறுத்தப்பட்டுள்ளது.

இதில் இன்னும் நாம் கவனிக்க வேண்டியது, பலருடைய சொந்தக் காணிகள் படையினரால் அத்துமீறிக் கையகப்படுத்தப்பட்டுள்ளமையாகும். இந்தக் காணிகள் இவற்றுக்கு உரித்தானவர்களுடைய சொத்து, உரிமை, உறுதிக் காணிகள், எந்தச் சட்டத்திலும் இவ்வாறான காணிகளை எதன் நிமித்தமும் உரியவர்களுடைய அனுமதியின்றி அடாத்தாக வைத்திருக்க முடியும் என்று சொல்லப்படவில்லை. ஆனாலும் படைத்தரப்பு இவற்றை அத்துமீறி வைத்திருக்கிறது. இப்படிப் பல கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் இவ்வாறு நிகழ்வது தவிர்க்க முடியாதது. அந்தச் சூழலும் நிலைமையும் வேறு. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் வேறு. ஏன் சட்டமும் கூட அப்பொழுது நெகிழ்ந்து வேறு விதமாகி விடுவதுண்டு. இதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது நிலைமை வேறு. இது யுத்தம் முடிந்து யுத்தத்தின் பிரதான தரப்பான விடுதலைப்புலிகள் முற்றாகவே அழிக்கப்பட்ட அல்லது முடக்கப்பட்டு விட்ட 13 ஆண்டுகளுக்குப் பிறகான நிலைமை சூழலாகும். அதாவது இயல்பு நிலை உருவாக்கப்பட்டு, மீள் குடியேற்றம் செய்யப்பட்ட சூழலாகும்.



நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக வெற்றிப் பிரகடனம் செய்யப்பட்டதோடு, வெற்றிகரமாக இயல்பு நிலை உருவாக்கப்பட்டதாக உத்தியோகபூர்வமாக பிரகடனம் செய்து பல வெற்றிக் கொண்டாட்டங்களையும் நடத்திவிட்டது அரசாங்கம். யுத்த வெற்றி, இயல்பு நிலை உருவாக்கம், புனரமைப்பு, புனர்வாழ்வு போன்றவற்றுக்கெல்லாம் உரிமை கோரியிருக்கிறார்கள் தலைவர்கள்.

இதற்குப் பிறகும் எந்த விதமான அறிவிப்புகளோ அக்கறைகளோ இல்லாமல் குறித்த காணிகளையும் மையங்களையும் படையகங்களாகவும் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் அரசும் படைகளும் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பது தவறாகும். இது நீதி மீறல், அறமற்ற செயல் மட்டுமல்ல, தன்னுடைய சொந்தக் குடிமக்கள் மீதான அடக்குமுறையை தொடருவதாகும். ஏனெனில் இந்த நிலங்களும் உடமைகளும் எதிர்த்தரப்பாகிய விடுதலைப் புலிகளுடையவை அல்ல. அவ்வளவும் மக்களுடையவை. அல்லது அரசுக்குச் சொந்தமானவை. அரசுக்குச் சொந்தமானவை என்றால் அதுவும் மக்களுக்குரியதே.

இவ்வாறே அரசியற் கைதிகள் என்ற பேரில் ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்ட விடுதலையாளர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுமாகும். இவர்களுடைய விடுதலையை இனி மேலும் தாமதிக்க வேண்டியதில்லை.

இதைக் குறித்தெல்லாம் தென்பகுதியில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டவாளர்கள், நீதிமான்கள், அறிவுசார் புலத்திலுள்ளோர், ஊடகர்கள், அரசியலாளர்கள் எவருக்கும் அக்கறைகள் கிடையாது. இவர்களில் பலரும் உத்தியோகபூவர்வமான பயணிகளாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் கடந்த 13 ஆண்டுகளிலும் வடக்குக் கிழக்கு வந்து சென்றிருக்கின்றனர்.

இப்படி வரும்போது எப்படியான சூழலில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர்? மக்களுக்கான உரிமைகள் எவ்வளவுக்கு மீறப்பட்டுள்ளது? எவ்வளவு நிலப்பகுதி படையாதிக்கத்தின் கீழுள்ளது? யுத்தத்திற்குப் பிறகும் இப்படியெல்லாம் செய்வது சரியா? என்பதையெல்லாம் நேரிலேயே பார்க்க முடிந்துள்ளது.

இதைப் போல காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்துகின்ற போராட்டம், தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலையாளர்களின் (கைதிகளின்) விடுதலைக்காகப் போராடும் மக்களுடைய நிலைமை போன்றவற்றையும் கண்டறிந்துள்ளனர். ஆனாலும் இதைக் குறித்து இவர்களுடைய அகக்கண் திறக்கப்படவே இல்லை. அப்படித் திறக்கப்பட்டிருந்தால் இதற்கான ஆதரவுக் குரலை அரசாங்கத்தின் நியாய மீறல் நடவடிக்கைகளுக்கு எதிரான குரலை எழுப்பியிருப்பர். குறைந்த பட்சம், இப்பொழுது தெற்கில் நடப்பவற்றுக்கு எதிராக எழுப்புகின்ற குரலோடு சேர்த்து இவற்றுக்கும் எதிராகச் செயற்பட்டிருப்பர். ஆனால் அப்படி நடக்கவே இல்லை.

இதேவேளை தமிழ், முஸ்லிம் தரப்புகளும் நீதிக்காகச் சிந்திக்கக் கூடிய சிங்களத் தரப்புகளோடு இணைந்து பயணிக்கத் தயாராக இல்லை. உரையாடல்களையும் உறவாடல்களையும் சரியாக நடத்துவதும் இல்லை. அந்தத் தரப்பிலிருந்தும் பொருத்தமான மன அமைப்புக் காணப்படுவதில்லை.

இது இனவாதம் எதிலும் எல்லாத் தரப்பிலும் வலுவாக செறிந்து போயுள்ளது என்பதையே தெளிவாகக் காட்டுகிறது. நமக்கு நடந்தால் வலிக்கும். மற்றவர்களுக்கு அதே போல் நடந்தால் வலிக்காது என்ற விதமான சிந்தனையே இதன் அடியொலிப்பாகும். இல்லையென்றால், தெற்கில் உயர்பாதுகாப்பு வலயம் கூடாது. வடக்குக் கிழக்கில் என்றால் சரியானது, ஏற்புடையது என்ற எண்ணம் வருமா? இது எவ்வளவு பிழையான சிந்தனை? இப்படிச் சிந்திப்பது அழகற்றது,நியாயமற்றது, அறிவற்றது அல்லவா!



அரசாங்கம் தான் தவறிழைக்கிறது. அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள் எல்லாம் தவறாகச் செயற்படுகின்றனர் என்றால் மக்கள் நிலை நின்று சிந்திக்கக் கூடிய தரப்புகளும் தவறு விடலாமா? இப்படி பேதநிலைப்பட்டுச் சிந்திக்கலாமா? இப்படி விலக்கிச் சிந்தித்தால் புறக்கணிக்கப்படுகின்ற மக்கள் விலகி (தனித்து) நிற்கத்தானே விரும்புவர்?

சட்டமும் நீதியும் உரிமையும் அன்பும் கருணையும் நியாயமும் அனைவருக்கும் பொதுவானவை. ஏன் ஆட்சியும் தான். இவையெல்லாம் ஆளாளுக்கு வேறுபடுமாக இருந்தால், குழப்பங்களும் பிரச்சினைகளும் அமைதியின்மையுமே ஏற்படும். இனம், மதம், சாதி, பிரதேசம், பால் என்று ஏதாவதொன்றின் பேராலும் பேதமாக இவற்றில் பாரபட்சம் நிகழுமாக இருந்தால் அதனால் நாடு முடிவற்றுப் பாதிப்படையும். இனப்பிளவு, நிலப்பிளவு, சமூகப் பிளவு என்று பிளவுகளே ஏற்படும்.

இன, மத, பிரதேச, வர்க்க ரீதியான பிளவுகளே இலங்கையைக் கடந்த காலத்தில் நாசப்படுத்தின என்பதை நாம் அனைவரும் நன்றாகவே அறிவோம். ஏன் இப்பொழுது கூட இந்தப் பிளவுகள்தான் நாட்டை நெருக்கடிக்குள்ளும் அமைதியின்மைக்குள்ளும் தள்ளி விட்டுள்ளன. உள்ளே நமக்குள் இணக்கம் கண்டு, ஒருங்கிணைந்து ஒற்றுமையாக இருக்க முடியாமல் தவிக்கும் நாம் பிராந்திய சக்திகளுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் முன்னால் மண்டியிடுகிறோம். உதவிப் பிச்சை கேட்கிறோம்.

வளமானதொரு நாட்டை நியாயமாகப் பரிபாலனம் செய்ய முடியாததன் விளைவுகளுக்காக எவ்வளவு உயிர்களைப் பலியிட்டிருக்கிறோம்! எவ்வளவு கோடி பெறுமதியான வளங்களையும் சொத்துகளையும் அழித்திருக்கிறோம்! மகத்தான ஒற்றுமையைச் சிதறடித்திருக்கிறோம்! மாண்பையெல்லாம் இழந்து உலகத்தின் முன்னே குற்றவாளிகளாகவும் கடன்காரர்களாகவும் திறனற்றோராகவும் அகதிகளாகவும் மண்டியிட்டுக் கூனிக் குறுகி நிற்கிறோம். இப்படியெல்லாம் சீரழிந்து கிடந்தாலும் நம்முடைய அறிவீனமும் மமதையும் நம்மை விட்டுப் போவதாக இல்லை. அத்தனை பைத்தியக்காரத்தனத்தையும் மூட்டை கட்டிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்.

எங்களிடையே எந்த விதமான மாற்றங்களும் நிகழவில்லை. ஆனால், இலங்கையின் மீதான சர்வதேச இறுக்கம் வரவரக் கூடிக் கொண்டே வருகிறது. ஆம், சுருக்குக் கயிறு நம்முடைய குரல் வளையை நசுக்குகிறது. இதைத் தெரிந்தும் தெரியாதவர்களைப் போல நாம் மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். மூடர்கள் வேறு எப்படி இருப்பர்?



# கானல் நீராகும் கடன் மறுசீரமைப்பு!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இலங்கை அரசாங்கத்துக்கு இன்று முக்கியமாக நெருக்கடியைத் தருகின்ற ஒரு சொல் தான், கடன் மறுசீரமைப்பு.

சர்வதேச கடன் வழங்குநர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாதிருப்பதாக, அதாவது வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதாக கடந்த ஏப்ரல் மாதம் அரசாங்கம் அறிவித்த பின்னர், நாடு பாரிய பொருளாதாரநெருக்கடியில் சிக்கிக் கொண்டது.

முன்னொரு போதும் இல்லாத அந்த நெருக்கடி ஒட்டுமொத்த மக்களையும் படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது. பொருளாதார வசதிகளின்றி எல்லாத் தர மக்களையும் நடுத்தெருவில் நிற்க வைத்திருக்கிறது இந்த நெருக்கடி. இதனால் 58மில்லியன் மக்கள் அரசாங்க நலன்புரி உதவிகளை எதிர்பார்க்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

இது நாட்டின் மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கிற்கும் அதிகம். இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் உத்தரவாதத்துடன் தான் முதலில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்றிருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

அவர் பதவியேற்றவுடன், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி, அதன் உதவிகளுடன் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதற்கமைய சர்வதேச நாணய நிதியத்துடன். அரசாங்கம் பேச்சுக்களைத் தொடங்கியிருந்தது. அதன் பின்னர், முதற்கட்டமாக பணியாளர் மட்ட உடன்பாடு ஒன்று கடந்த செப்டெம்பரில் எட்டப்பட்டது.

ஆரம்பத்தில் அந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டதாக கூறிய அரசாங்கம், அதனை வெளிப்படுத்துமாறு கோரிய போது, கையெழுத்திடப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை, புரிந்துணர்வு இணக்கம் மட்டும் தான், எட்டப்பட்டது என்று, சமாளிக்கிறது.

இந்த இணக்கப்பாட்டுக்குப் பின்னர், கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டை எட்டியதும், டிசம்பருக்குள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும் என்றும் கூறப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் நான்கு ஆண்டுகளில், 2.9பில்லியன் டொலர்கள் உதவியை எட்டு தவணைகளில் வழங்குவதாக உறுதியளித்திருக்கிறது. ஆனால் அதனை சர்வதேச நாணய நிதியம், நிபந்தனைகளின் அடிப்படையில் தான் வழங்கப் போகிறது.

முதலில், கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி, கடன் மறுசீரமைப்பு உத்தரவாத இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் முக்கியமான நிபந்தனை.

பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் போன்ற நிபந்தனைகளும் அதன் நிகழ்ச்சி நிரலில் உள்ளன. அது அடுத்தடுத்த தவணைகளிலேயே தாக்கம் செலுத்தும் எனத் தெரிகிறது.

இப்போதைக்கு முக்கியமாக, கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது தான், மிக முக்கியமான நிபந்தனை. அதனை நிறைவேற்றியிருந்தால், இலங்கைக்கு வரும் டிசம்பருக்குள் முதற்கட்ட நிதியுதவி கிடைக்கும். அதனைத் தான் அரசாங்கம் பெரியளவில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டை எட்டுவதில் அரசாங்கம் இதுவரை வெற்றி பெறவில்லை.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 51பில்லியன் டொலர்களாகும். அதில் இறையாண்மைக் கடன்கள் 35 பில்லியன் டொலர்கள் என்று கடந்த வாரம் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

இதில், இருதரப்பு கடன்கள் 10.9 பில்லியன் டொலர்கள், பலதரப்பு கடன் 9.3 பில்லியன் டொலர்கள், வணிக கடன்கள் 14.8 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இதில் சீனா மட்டும், 7.1 பில்லியன் டொலர்கள் கடன்களை வழங்கியிருக்கிறது. இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன்களில், இது 20சதவீதம் ஆகும்.

இலங்கைக்கு கடன்களை வழங்கியுள்ள, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும், ஒரே கோட்டில் வந்து நின்றிருந்தால், டிசம்பருக்குள், இலங்கைக்கு முதற்கட்ட நிதியை சர்வதேச நாணய நிதியம் விடுவித்திருக்கும். ஆனால், அப்படி நடக்கப் போவதில்லை. சில நாட்களுக்கு முன்னர் தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க, டிசம்பரில், சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைப்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஜப்பானுடன் பேச்சுக்களை நடத்திய அரசாங்கம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்ற போதும், கடன் வழங்குநர்களின் கூட்டத்தைக் கூட்டுவதில் இழுபறி காணப்படுகிறது.

அதேவேளை, இரண்டு பிரதான கடன் வழங்குநர்களான இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றிடம் இருந்து இன்னமும் சரியான பதில் கிடைக்கவில்லை. இந்த நிலைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று பாரிஸ் கிளப்பில் இந்த நாடுகள் அங்கம் வகிக்கவில்லை. ஜப்பான் மட்டும் தான் அதில் அங்கம் வகிக்கிறது.

அதனால் இந்த இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தப்படுவதாக ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், இந்தியா இன்னமும் பிடிகொடுக்காமல் நழுவிக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, இலங்கையை சீனா கைவிட்டு விட்டது, அதனால் தான், டிசம்பருக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற முடியாமல் போயிருக்கிறது என்ற குற்றச்சாட்டை சர்வதேச அரங்கில் இந்தியா வெளிப்படுத்த ஆரம்பித்திருக்கிறது. சீனாவுடன் இன்னமும் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக, பேச்சுக்கள் தொடக்கப்பட்டவேயில்லை.

அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ள முக்கியமான காரணம், சீனாவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதிகார மாற்றங்கள்.

சீனாவைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்ட் கட்சி தான் அரசாங்கம். அந்தக்கட்சியில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் அரசாங்கத்தின் கட்டமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். கட்சியின் உயர்பீடத்தில் உள்ள 7 பேரும் தான், அரசாங்கத்தின் உயர்நிலை அமைச்சர்களாக விளங்குவார்கள்.

அண்மையில் நடந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது மாநாட்டில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மூன்றாவது முறையாக, கட்சியின் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவர் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தும் வகையில் தனக்கு நெருக்கமானவர்களை கட்சியின் உயர் பதவிகளுக்குக் கொண்டு வந்திருக்கிறார். அவ்வாறான மாற்றத்தினால், சீனப் பிரதமர் லி கெகியாங் பதவி இழந்துள்ளார்.

கடந்த மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து தொலைபேசியில் பேச்சு நடத்திய, சீன நிதி அமைச்சர் லியூ குன்னும் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

இவ்வாறான நிலையில், புதிய நியமனங்கள் உறுதி செய்யப்பட்டு, அவர்கள் பதவியேற்ற பின்னர் தான், இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு குறித்து சீனா இணக்கப்பாடு ஒன்றுக்கு வர முடியும்.

சீனாவின் இந்த அதிகார மாற்றம், இலங்கையின் நெருக்கடியை தீர்ப்பதில் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. அதை விட, இந்தியாவுடன் சீனா கொண்டிருக்கின்ற முரண்பாடுகளும் கூட கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இணக்கப்பாட்டுக்குத் தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.

ஆனால் அது எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை, அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு. கள் என்று வர்ணிக்கப்பட்டாலும் இந்தியாவும், சீனாவும் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை விரைவாக முன்னெடுக்கத் தவறியுள்ளன.

இது இலங்கையின் கடன் நெருக்கடியை பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்தும் நிலையை தோற்றுவித்திருக்கிறது. இப்போது இணக்கப்பாடு எட்டப்படாததால், அடுத்த ஆண்டு மார்ச் வரை சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் தாமதம் ஆக கூடும் என்று கூறப்படுகிறது.

அது உண்மையானால், இலங்கைக்கு வரும் மாதங்கள் இன்னும் கடுமையானதாகவே இருக்கப் போகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன் வாக்குறுதிகளை காப்பாற்ற முடியாமல், கடுமையான நெருக்கடியை அவர் சந்திக்கும் நிலை ஏற்படலாம்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு:- உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன?



சேர சோழ பாண்டியர்களை விட தற்போது பிரிந்து கிடக்கும் கட்சிகளால் தமிழ் இனம் நாதியற்று கிடக்கிறது. புலம்பெயர் கூட்டத்தின் பணத்திற்காக எல்லா வற்றையும் எதிர்க்கும் கஜேந் திரகுமார் மற்றும் நிலையில்லாத வேலைத் திறனில்லாத விக்னேஸ்வரன் வகையறாக்களை தவிர்த்து கூட்டமைப்பை மட்டும் அலசுவோம்.



2020 தேர்தலில் அவமானகரமான தோல்விக்கு பின் கட்சியை கட்டி எழுப்பி மக்களை வழி நடத்துவதை விட்டு இன்னமும் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் இவர்களை என்னவென்று சொல்வது?. சம்பந்தனுக்கு 90இலும் பதவி ஆசை தீரவில்லை. வைக்கோல் பட்டறை நாய் போல் ஒரு முக்கியமான பிரதேசமான திருகோணமலையை அநாதையாக வைத்து



அரசின் கண் மூடித்தனமான அபகரிப்பு அட்டூழியங்களுக்கு மறைமுகமாக துணை போகிறார்.



மாவையோ முதலமைச்சர் கனவில் இருப்பதால் மற்றவை பற்றி துளி கூட அக்கறை இல்லை. சுமந்திரன் என்ன தான் சட்டவல்லுநராக இருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக இலவசமாக வழக்குகளில் ஆஜாரானாலும் அவரின் அதிமேதாவித்தனத்தாலும் தன்னிச்சையான செயற்பாடுகளாலும் மற்றவர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு இல்லாததாலும் தனிமைப் பட்டு நிற்கிறார்.

கிளிநொச்சி சிற்றரசன் சிறீதரன் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் போல் தமிழ்மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் ஆனால் 13ம் திருத்தம் ஏற்புடையதல்ல என்கிறார். சாணக்கியன் இளைய விடிய வெள்ளி. ஆனால் சரியாக வழிநடத்தபடவில்லை. கிழக்கு மக்களின் அன்றாட அரசியல் பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

ரெலோ செல்வம் அன்கோ ஏதோ ஒரு பக்கம் தம்பாட்டிற்கு குறுக்கால் இழுத்து கொண்டு போய் தாங்கள் தான் தமிழர்களுக்காக உண்மையாக குரல் கொடுப்பது போல் காட்ட முனைகிறார்கள். சித்தார்த்தன் அத்தி பூத்தாற்போல் தானும் இருப்பதை நினைவூட்ட அவ்வப்போது அறிக்கைகள் விடுகிறார். மற்றைய எம்.பி.க்கள இருப்பதும் தெரியாது. போவதும் தெரியாது.

மொத்தத்தில் எல்லா தமிழ் அரசியல் வாதிகளும் (டக்ளஸ் தவிர) நம் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள். 2020 தேர்தல் பின்னடைவுக்கு பின் சுய பரிசோதனை செய்து தவறுகளை திருத்திக் கொள்ளாமல் மேலும் மேலும் அதல பாதாளத்தை நோக்கி இனத்தை இழுத்து செல்கிறார்கள்.

இந்நிலையில் பின்வரும் மாற்றங்களை இவர்கள் அமுல் படுத்தாவிட்டால் அடுத்த தேர்தலில் கூண்டோடு மண் கவ்வுவது நிச்சயம். தற்போதைய காலத்தின் தேவைகளை உணர்ந்து இந்த கூட்டமைப்பினர் பின்வரும் நிகழ்ச்சி நிரலை உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என்பதே பெரும்பான்மை தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

1. தமிழரசு டெலோ உட்பட எல்லா கட்சிகளும் கலைக்கப்பட்டு தமிழ் ஐக்கிய முன்னணி என்ற ஒரே கட்சியாக இயங்க வேண்டும். (இல்லையேல் கூட்டணியில் இருந்து அவரவர் விலகி தனித்து நிற்க வேண்டும்).

2. சம்பந்தர் இளைப்பாறி அப்பதவி திருகோணமலையை சேர்ந்த தகுதி வாய்ந்த ஒருவருக்கு வழங்க வேண்டும். சம்பந்தர் கட்சியின் கௌரவ தலைவராக ஆலோசகர் பதவி வகிக்கலாம். இந்நிலையில் ஒருதகுதி வாய்ந்த தலைவரையும் செயளாளரையும் உடனடியாக தேர்வு செய்ய வேண்டும்.

3. தன்னிச்சையான அறிக்கைகள் பத்திரிகையாளர் கூட்டங்கள். அரசியல் சந்திப்பு கள்.வெளிநாட்டு அரசியல் ரீதியான பயணங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு கட்சியின் அனுமதியுடனேயே இனி இவை அனைத்தும் மேற்கொள்ளபட வேண்டும்.

4.65வயதிற்கு மேற்பட்டவர்கள் பாராளுமன்ற தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிட்ட அனுமதிக்க கூடாது. தகுதி மிக்க 35 -50 வயதிற்கு உட்பட்ட இளையவர்களுக்கு 50வீத இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும். பெண்களுக்கு குறைந்த பட்சம் 20 வீத இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

5.தேர்வு செய்யபட்ட ஒவ்வொரு எம்.பி.க்கும் ஒவ்வொரு துறைகளை மேற்பார்வை செய்ய ஒழுங்கமைக்கப்பட்ட வேண்டும். இவை வடக்கு கிழக்கில் உள்ள பின்வரும் துறைகளாகும் வெளிநாட்டு உதவியுடன் பெரிய தொழிலகங்களை உருவாக்க வேண்டும். (large industries) வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்.

சிறிய நடுத்தர கைத்தொழில்களை ஊக்குவித்தல். NorthEast SMEBank ஒன்றை புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் உருவாக்கி இலகு கடன் திட்டங்களை வகுத்தல் மூலம் இவற்றை வளர்க்க உதவலாம்.

இவற்றின் மூலம் இளைஞர்களிடையே உள்ள வெளிநாட்டு மோகத்தை உடைக்கலாம். விவசாயத்துறையையும் நீர்ப்பாசன துறைகளையும் ஒருங்கிணைத்து உற்பத்தியை அதிகரித்தும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தை படுத்தலையும் முறைப்படுத்துதல்.

சொட்டு நீர்ப்பாசனம் சூரிய சக்தி தண்ணீர் பம்புகள் கலப்பு சேதன உரம் பாவனை போன்ற நவீன திட்டங்களை

உருவாக்குதல். தாழ்ந்து போயுள்ள கல்வித்துறையை மீண்டும் மேம்படுத்தல். மேலும் தொழில்நுட்ப கல்லூரிகள் பலவற்றை உருவாக்கி இளைஞர் சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்கு வித்திடல். விளையாட்டுதுறைகளிலும் மாணவர்கள் இளைஞர் யுவதிகளை ஊக்குவித்து உலகத்தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்க வேண்டும். குளங்கள் தூர்வாரப்பட்டு ஆறுகளை விரிவாக்கி கடலில் கலக்கும் மழை நீரின் அளவை குறைத்து நிலத்தடி நீர் வளத்தை அதிகரித்தல். ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய பாரிய காடாக்கல் திட்டங்களை உருவாக்கி பசுமை வளத்தை அதிகரித்தல்.

பனை உற்பத்திகளை பெருக்குதல். பனஞ்சீனி தொழிற்சாலை களை நிறுவுதல். அதேநேரம் பாரிய தென்னஞ் செய்கையை மேற்கொள்வதுடன் உலகத் தரம் வாய்ந்த தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நிறுவி ஏற்றுமதிக்கு வழிவகுத்தல்.

பல பறவைகள் சரணாலயங்களையும் பெரும் மரப்பூங்காக்களையும் பொருத்தமான இடங்களில் அமைத்து உள்ளூர் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரித்தல்.

சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் முக்கியமாக போதைப் பொருள் பாவனையிலிருந்து இளைஞர்களை மீட்டெடுத்தல்.

பலாலி மட்டுநகர் விமான நிலைய விஸ்தரிப்பு வேலைகளை இந்திய அரசின் உதவியுடன் உடனடியாக ஆரம்பிக்க அரசிற்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரவேண்டும். இதற்கான காணி சுவீகரிப்பு நடக்கும் போது தொப்பியை பிரட்டி காணிகள் பறி போகுதே என்று கூக்குரல் இடக் கூடாது.

வடக்கு கிழக்கில் உள்ள பிரதான நகரங்களின் வீதிக் கட்டமைப்புகளை விரிவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும். மீனவர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண வழிவகுக்க வேண்டும். மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதும் பலாலி. மட்டு நகர் விமான நிலையங்களிலிருந்து நேரடியாக ஏற்றுமதி செய்து கொழும்பில் இருந்து ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் காலவிரயத்தை தவிர்க்க உதவ வேண்டும்.

இந்தியாவில் அவதியுறும் அகதிகளை நாட்டில் மீள் குடியமர்த்தி வாழ்வாதாரங்களை இந்திய மற்றும் புலம்பெயர் தமிழர்கள் உதவியுடன் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இதன் மூலம் குறைந்த இன் விகிதாசாரமும் கூடுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

யுத்தத்தில் கணவன் பிள்ளைகளை இழந்த குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புகளையும் சுய தொழில் வாய்ப்புகளையும் புலம்பெயர் சமூகம் மூலமாக ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மேலும் வடக்கு கிழக்கில் ஜனத்தொகை பெருக (இழந்து போன) ஊக்குவித்து போஷாக்கு போன்ற அத்தியாவசிய காரணிகளை. சமூகத்தில் மேம்படுத்தல் வேண்டும்.

இவற்றை போல இன்னும் பல இருந்தாலும் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டு உள்ளேன். இத்தகைய வேலைத்திட்டங்களுடனும் தேர்ந் தெடுக்கப்பட்ட கல்வியறிவு கொண்ட இளைஞர்களை முன்னிறுத்தி இவற்றை துடிப்புடன் அமுல் படுத்துவதாக தமிழ் மக்களுக்கு. உத்தரவாதம் அளிப்பதன் மூலமும் மட்டுமே கூட்டமைப்பினர் இனி எம்முன் வர வேண்டும். வெறும் வாய்ச் சவாடல்களும். பழம் பெருமை பேசவதும். சிலை திறப்பு விழாக்கள். நினைவேந்தல்களில் பங்கு பற்றுவது போன்றவை தான் இவர்களின் கடமை அல்ல. மக்கள் எதிர்பார்ப்புகள் ஏராளம் உண்டு. மேலும் நடைமுறையில் சாத்த்தியமற்ற சமஷ்டி மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு கோஷங்களை வைத்து கொண்டு எவ்வித தீர்வுகளையும் வர விடாமல் குறுக்கே நிற்கும் நடவடிக்கைகளை தற்போது நிறுத்த வேண்டும். அத்துடன் சில புலம்பெயர் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு தாளம் போட்டதும் இனி மேல் போதும் ஏனெனில் அவர்களில் சிலர் இங்கே பிரச்சினைகள் தீர்க்கப் பாடாமல் நெருப்பு போல் என் நேரமும் கனன்று கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

அப்போது தான் அவர்கள் அங்கே சௌகரியமாக கடை விரிக்க முடியும். ஆதலால் கூட்ட மைப்பினரே. இன்னொரு முறை உங்கள் பூச்சுற்றல் வேலைகள் எடுபடாது. நீங்களாக மாறவில்லை அன்றேல் திருந்தவில்லை என்றால் அனைவரும் குப்பை தொட்டிக்குள் வீசப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை.


**Restaurant**

**வேலைக்கு ஆள் தேவை**

ஸ்காபரோவில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ளCook உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 647 545 2430

Cansintraders@gmail.com

# அமல பரிசோதனையில் பா.ஜ.க.வா? தி.மு.க.வா?

கோவையில் எரிவாயு உருளை வெடித்து விபத்து ஏற்பட்டதென தமிழக அரசும், கோவையில் நடைபெற்றது தீவிரவாதிகளின் தற்கொலை தாக்குதலென தமிழக பா.ஜ.கவும் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது.

இவ்விவகாரம் தொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் ஆவேசமான பேச்சுகள் மக்களிடத்தில் குறிப்பாக அறிவார்ந்த மக்களிடத்தில் நேர்நிலையான தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு பதிலாக, எதிர்நிலையான தாக்கங்களே ஏற்படுத்தி வருகிறது.



இவர் காவல்துறையில் பணியாற்றிய முன்னாள் உயரதிகாரி என்றாலும், சம்பவம் நடைபெற்ற பகுதியில் உளவுத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பான விவரங்களையும், அரசு மற்றும் காவல்துறை நிர்வாகத்திற்கு மட்டும் தெரிந்திருக்கும் சில ரகசிய விடயங்களை, இவர் பொதுவெளியில் பகிரங்கமாக வெளியிட்ட விவரங்களையும் உற்று நோக்கினால், தமிழக காவல்துறையின் உயர்மட்டத்தில் இருக்கும் சிலர், இரகசிய தகவல்களை பாஜக தரப்பிற்கும், ஆளுநர் தரப்பிற்கும் கசிய விடுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு, பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை மீது அவதூறு அல்லது வேறு வகையினதான வழக்குகளை பதிவு செய்து விசாரிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் தமிழக அரசோ, எந்த ஒரு நடவடிக்கையும், தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை மீது எடுக்காமல் நிதானமான அணுகுமுறையை கையாண்டு வருகிறது. இதன் பின்னணியில் மறைந்திருக்கும் அரசியல் என்னவென்பது கேள்வியாகிறது.

மேலும் வன்முறை சம்பவம் நடைபெற்ற இடத்தில் அரசியல் கட்சித்தலைவர்கள் துரிதமாக அங்கு செல்வது என்பது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்தும், மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே உள்ள கோட்டை ஈஸ்வரன் ஆலயத்திற்கு சென்றிருக்கிறார்.

கடந்த ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவதற்கு எதிர்க்கட்சி தலைவர்களை அங்கு செல்ல அரசும், மாவட்ட நிர்வாகம் அனுமதிக்கவில்லை.

அத்துடன் தமிழக அரசுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டிய மத்தியில் ஆளும் தேசிய கட்சியான பா.ஜ.க., கோவை சம்பவத்தில் மாநில அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்காததுடன், மாநில அரசின் நிர்வாக திறமையின்மை மீது குற்றம் சுமத்துவது தவறாகும்.

இதனிடையே கோவை சம்பவத்தை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேட முயன்ற பா.ஜ.க.வின் மாநில தலைவரான அண்ணாமலையின் அதிரடி பேச்சால், அக்கட்சி, உட்கட்சி பூசலை எதிர்கொண்டிருக்கிறது. அண்ணாமலை கோட்டை ஈஸ்வரன் கோயிலுக்கு வருகை தந்த போது, அத்தொகுதியின் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரான வானதி சீனிவாசனும், கோவையில் செல்வாக்கு மிக்க பா.ஜ.க. தலைவரான முன்னாள் மக்களவை உறுப்பினரான சி.பி. இராதாகிருஷ்ணனும் உடன் வரவில்லை. ஏனெனில் சி.பி.இராதாகிருஷ்ணன் மற்றும் வானதி சீனிவாசன் ஆகியோர் கோவை சம்பவத்தை முன்வைத்து, கோவையில் கடை அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது ஆஜரான அண்ணாமலை, 'இந்த போராட்டத்தை மாநில பா.ஜ.க. அறிவிக்கவில்லை' என்று தெரிவித்திருந்தார்.

இது அக்கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்களிடையே பெரும் அரசியல் ரீதியான அழுத்தத்தையும், உட்கட்சி பூசலையும் ஏற்படுத்தியது. என்பதும், ஏற்கனவே பா.ஜ.க. மாநில செயலாளரான கே டி ராகவன் விடயத்தில் அண்ணாமலை பக்கம் சார்ந்து மாநில நிர்வாகிகளை கதி கலங்கடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோவை சம்பவம் குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இவ்விவகாரம் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை விசாரிக்க பரிந்துரை செய்தார். கோவையில் சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாக விரைந்து சென்று தமிழக காவல்துறையினர், ஏராளமான விவரங்களையும், தடயங்களையும் சேகரித்தனர்.

இவர்களது விசாரணை துரிதமாகவும், தூய்மையாகவும் நடை பெற்றது. ஆனால் இவ்விவகாரத்தில் அண்டை மாநிலங்களுக்கும், அண்டை நாடுகளுக்கும் தொடர்பு இருக்கிறதென சந்தேகம் எழுந்ததால், இந்த விவகாரத்தை தேசிய புலனாய்வு முகமை விசாரிப்பது தான் பொருத்தமென தீர்மானித்து அதன் விசாரணைக்கு முதல்வர் பரிந்துரை செய்தார். அவரது இந்த நடவடிக்கை தமிழக மக்களால் பாராட்டப்படுகிறது.

ஆனால் தமிழக அரசு மீது ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார். அவர் அரசு அல்லாத தனியார் நிகழ்வில் பங்கு பற்றினாலும் அரசு மீது குற்றச்சாட்டு சுமத்துவதை கைவிடவில்லை. கோவை விவகாரத்தில் தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு உத்தரவிட தாமதப்படுத்தியது ஏன்? என்று வினா எழுப்பி இருக்கிறார்.

இதனிடையே கோவை சம்பவம் குறித்து தேசிய புலனாய்வு முகமையின் விசாரணை எப்படி இருக்கும்? என்பதற்கு, அந்த முகமையின் கடந்த கால வரலாற்றை பலரும் உற்று நோக்குகிறார்கள். தேசிய புலனாய்வு முகமை இதற்கு முன் மலேக்கான் குண்டு வெடிப்பு, ஹைதராபாத் மசூதி குண்டு வெடிப்பு, சம்ஜோதா ரயில் குண்டு வெடிப்பு, போன்ற பல குண்டு வெடிப்புகளை விசாரித்து இருக்கிறது.



இதில் மத்திய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கமான தலைவர்களான பிரக்யா தாக்கூர் போன்ற தலைவர்களை தேசிய புலனாய்வு முகமை காப்பாற்றி இருக்கிறது என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்நிலையில் கோவை சம்பவத்திற்கு தேசிய புலனாய்வு முகமையின் விசாரணை, அரசியல் குறுக்கீடுகள் இன்றி நேர்மையாக நடைபெற வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகும்.

ஆனால் தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் பா.ஜ.க., அதிலும் கோவையில் தங்களுக்கு செல்வாக்கு இருக்கிறது என்று உறுதியாக நம்பும் பா.ஜ.க., தேசிய புலனாய்வு முகாமையின் விசாரணை நேர்பட நடைபெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு அளிக்கும் என்பது சந்தேகம் தான்.

அதே தருணத்தில் கோவை சம்பவத்தை, 'பயங்கரவாத செயல்' எனக் கருதி, மத்திய அரசு தேசிய புலனாய்வு முகமை மூலம் விசாரணை என்கிற பெயரில் அதனை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தக்கூடும் என்றும், இவ்விகாரத்தில் திராவிட முறைமை பாணியிலான ஆட்சியை நன்முறையில் நடத்தி வரும் தி.மு.க. அரசு, 'கண் கொத்தி பாம்பாக' கவனித்து செயல்பட வேண்டியுள்ளது.

இதனிடையே கோவை சம்பவம் நடைபெற்ற போது ஊடகங்களுக்கு பேட்டியளித்த மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, 'கோவையில் தற்கொலை தாக்குதல் நடந்திருந்தால், இந்த ஆட்சி டிஸ்மிஸ் ஆகியிருக்கும்'' எனப் பேசியிருக்கிறார். அவரது இந்த பேச்சுக்கு தமிழகத்தை சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளும் வலிமையான கண்டனத்தை அறிக்கைகளின் மூலம் பதிவு செய்திருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**- குடந்தையான் -**


# தமிழர்களுக்கு அரசியல் தீர்வை நிச்சயமாக வழங்குவோம் -நீதியமைச்சர்

(7ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர். இவை தொடர்பில் நாம் நேரில் ஆராந்து விரைந்து தீர்வு காண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்களை எடுப்போம் என்றார்

# தமிழர் தாயகத்தில் அடையாள அழிப்பு:- சிறுதெய்வ வழிபாட்டை அழிக்கும் ஐயர்கள்

(16ம் பக்கத் தொடர்ச்சி) இன்று எல்லாவற்றையும் மெல்ல மெல்ல உட்கொண்டு பெருந்தெய்வ வழிபாடு வளர்கிறது. இல்லையில்லை. வளர்க்கப்படுகிறது. இதற்குப் பின்னால் உள்ள அரசியல் சாதாரணமானதல்ல. அது நம்மைப் பலியெடுப்பது. இப்பொழுது அதற்கு நம்மை நாமே பலியிடுகிறோம்.

# மீண்டும் கப்பலில் தமிழ் அகதிகள்! கேள்விக்குறியுடன் வியட்நாமில்!



(3ம் பக்கத் தொடர்ச்சி)இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், கடுமையான விசாரணைகளுக்கும் தடுப்புக் காவலுக்கும் உள்ளாக வேண்டியிருக்கும் என்பதால் அவர்கள் விரும்பிய நாடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது. ஆனால், அவர்கள் விரும்பும் நாடுகள் அதனை ஏற்றுக் கொள்ளுமா என்பது முக்கியமான கேள்வி.

வியட்நாமிய கடற்பகுதியில் கப்பலொன்றில் இருந்து மீட்கப்பட்ட இலங்கை தமிழ் புலம்பெயலாளர்கள் தொடர்பில் ஐநா அகதிகளுக்கான நிறுவனம் மனிதாபிமான கண்ணோட்டத்தில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பாராளுமன்றத்தில் புதன் கிழமை தெரிவித்தார்.

இவர்கள் இங்கிருந்து இடம்பெயர காரணமென்ன? இங்கு வாழலாம் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இல்லாது போனமைக்கான காரணம் என்ன? அவர்கள் நம்பக் கூடிய அரசியல் தீர்வை வழங்காமையினாலேயே உயிரை பணயம் வைத்து ஆபத்தான பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கனடா நோக்கி சென்றதாகவே கூறப்படுகின்றது. இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளதுடன், பலர் அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்றும் சிறிதரன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இந்த நிலையில் வியட்நாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள 306 ஈழத் தமிழர்களின் விவகாரம் அடுத்து வரும் சில வாரங்களுக்கு பரபரப்பான செய்தியாக – செய்திகளில் பேசு பொருளாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். இவர்களை மீளவும் இலங்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் ரணில் அரசு உறுதியாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். அதனால், அகதிகளுக்கான சர்வதேச அமைப்புக்கள் இதில் தலையிடவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம்.

# சர்வதேச அரசியலும் ஈழத்தமிழர்களின் அரசியலும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



சர்வதேச அரசியல் தொடர்பில் பலரும் பேசுகின்றனர். ,தனை சிலர் பூகோள அரசியல் என்று எழுதுகின்றனர். அடிப்படையில் சர்வதேச அரசியல் என்பது உலகளவில் நடைபெறும் அரசியல் விவகாரங்களின் தொகுப்பாகும். உலகில் தினமும் பல்வேறு விடயங்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் சில விடயங்களை சாதாரணமாக கடந்து செல்கின்றோம், சில விடயங்களை அவ்வாறு சாதாரணமாக கடந்து செல்ல முடியாது.



ஏனெனில் சில விடயங்கள் நமது விருப்பு, வெறுப்புகளைத் தாண்டி நம் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக 2001 இல் அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது அல்-ஹைடா என்னும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு விமானத் தாக்குதலை நடத்தியது. இதன் போது உலக வர்த்தக மையம் மற்றும் அமெரிக்க இரானுவ கேந்திர நிலையமான பெந்தகான் தாக்குதலுக்குள்ளானது. இந்தத் தாக்குநல்களில் கிட்டத்தட்ட 3000 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை பிரகடனம் செய்தது. சர்வதேச அரசியல் ஒழுங்கானது, ஒரே நாளில் மாறிப் போனது. இந்தப் பிரகடனத்தைத் தொடர்ந்து அனைத்து ஆயுத அமைப்புகளையும் ஒரே கண் கொண்டு பார்க்கும் நிலைமை உருவாகியது.

இந்தப் பின்புலத்தில் தான், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தைக்குத் திரும்பியது. திரும்பியே ஆக வேண்டிய நிலையிருந்தது. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு வழிப் பாதையாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் மீண்டும் தங்களின் பழைய பாதையை நோக்கி திரும்ப முற்பட்ட போது, ஒட்டு மொத்த மேற்குலகமே விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பியது.

விடுதலைப்புலிகள் இயக்கம் அழிந்து போன கதை இது தான். மற்றும்படி, விடுதலைப் புலிகள் இயக்கத்தை கோத்தாபய ராஜபக்ஷ தோற்கடித்தார், மகிந்த அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதெல்லாம் அவர்களின் கதைகள். உலகளாவிய அரசியல் சூழல் விடுதலைப் புலிகளுக்கு முற்றிலும் பாதகமாகவும் இலங்கைக்கு முற்றிலும் சாதகமாகவும் இருந்தது. இந்தச் சூழலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஒரு பலமான நாடு இருந்திருந்தால், விடுதலைப் புலிகள் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள்.

தெற்காசியாவில் இந்தியாவினால் மட்டுமே அதனைச் செய்திருக்க முடியும். ஆனால் விடுதலைப் புலிகள் இந்தியாவை விரோதித்துக் கொண்டதால் அது சாத்தியப்படவில்லை. உண்மையில் அருகிலுள்ள ஒரு பலமான நாட்டை விரோதித்துக் கொண்டு அதிக காலத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாது. இதில் பிடல் காஸ்ரோ மட்டுமே விதிவிலக்கு. பிடல் காஸ்ரோ பலம் வாய்ந்த அமெரிக்காவை (சி.ஐ.ஏ.வை) விரோதித்துக் கொண்டு வெற்றிகரமாக இயங்கினார். ஆனால் காஸ்ரோ, பனிப்போர் கால அரசியலை ஆழமாகப் புரிந்து கொண்டு சோவியத் சார்பு நிலையை எடுத்துக் கொண்டதன் விளைவாகவே அவரால் தப்பிப் பிழைக்க முடிந்தது. அதுவும் கரணம் தப்பினால் மரணம் என்பது போன்ற ஒன்றுதான்.

ஆனால் பிடலுக்கு அது சாதகமாக அமைந்தது. பனிப் போருக்குப் பின்னர், அமெரிக்கா ஒரேயொரு சக்தியாக பரிணமித்த சூழலில் பிடல் காஸ்ரோவை, அழிக்கும் முயற்சியை அமெரிக்கா கைவிட்டு விட்டது. பனிப் போர் காலத்தில் காஸ்ரோலை கொலை செய்வதற்கு சி.ஐ.ஏ. பல முயற்சிகளை மேற்கொண்டது. பனிப் போருக்குப் பின்னர் அவ்வாறான தேவையிருக்கவில்லை .



இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு தான், மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தாக்குப் பிடிக்க முடிந்த விடுதலைப் புலிகள் இயக்கமானது, மூன்றே வருடங்களில் அழிக்கப்பட்ட சூழலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகின் வேறு பாகங்களில் இடம் பெறும் விடயங்கள் ஒவ்வொன்றும் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதற்கான ஒரு உதாரணமாகவே இதனைக் குறிப்பிட்டேன். இவ்வாறு தான் பலம் பொருந்திய நாடுகளுக்கிடையிலான அல்லது அந்த நாடுகளின் ஆதரவுடன் இடம் பெறும் யுத்தங்கள் ஏனைய நாடுகளிலுள்ள மக்களை பாதிக்கின்றன. இந்தப் பாதிப் புகளிலிருந்து எவருமே தப்பிக் கொள்ள முடியாது. இதனை எதிர்கொண்டேயாக வேண்டும். தற்போது இடம் பெற்று வரும் ரஷ்ய-உக்ரைன் யுத்தம் ஐரோப்பிய பிராந்தியத்தில் பதற்றங்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த நிலைமையானது, இலங்கை போன்ற சிறிய நாடுகளின் பொருளாதார நிலைமையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சர்வதேச அரசியல் பின்புலத்தில் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் போக்கை எவ்வாறு புரிந்து கொள்வது? ஒரு இனத்திற்கான சர்வதேச அரசியல் என்பது, அந்த இனத்தின் புவியியல் அமைவிடத்துடன் தொடர்புடையது. அதாவது, அந்த இனம் வாழும் நாடு எந்தப் பிராந்தியத்துடன் தொடர்புபடுகின்றதோ, அந்தப் பிராந்தியம் தான் குறித்த இனத்தின் சர்வதேச அரசியலை தீர்மானிக்கும் உயிர்ப்பான களமாகும். இந்த அடிப்படையிலிருந்து நோக்கினால், ஈழத் தமிழர்களுக்கான சர்வதேச அரசியலில் இரண்டு விடயங்கள் அடிப்படையானவை.

ஒன்று, ஈழத் தமிழர்கள் வாழும் தெற்காசிய பிராந்தியம். இரண்டாவது, ஈழத் தமிழர்களுக்கு அருகிலுள்ள பெரிய நாடான இந்தியா. இதில் தமிழ்நாட்டை ஒரு தனியான பகுதியாக நோக்க முடியாது. ஏனெனில் அது இந்தியாவின் ஒரு அலகு. சர்வதேச உறவுகளில் ஒரு கோட்பாடுண்டு. அதனை, ரீஜனல் செக்குயுரிட்டி கொம் பிளக்ஸ் என்பார்கள். அதாவது, உலகம் பிராந்தியங்களாக பிரிந்திருக்கின்றது, அந்தப் பிராந்தியத்தில் பெரிய நாடும் சிறிய நாடுகளும் இருக்கின்றன, அந்த பெரிய நாடு, அதன் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு சிறிய நாடுகள் மீது தலையீடு செய்யும், இதனை தவிர்க்கவே முடியாது. இது சிறிய நாடுகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது என்பது தான் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையாகும். கோட்பாட்டு ரீதியாக நோக்கினால் ஈழத் தமிழர்கள் எக் காலத்திலும் இந்தியாவின் தலையீட்டிலிருந்து விலகிச் செல்ல முடியாது.



உண்மையில் இது நான் ஈழத் தமிழர்களின் புவிசார் அரசியலாகும். ஈழத் தமிழர்களின் புவிசார் அரசியலை இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாது. இந்தப் பின்னணியில் நோக்கினால், ஈழத் தமிழர்களுக்கான சர்வதேச அரசியல் என்றாலும் புவிசார் அரசியல் என்றாலும் அது அடிப்படையில் இந்தியா தான். நமது இதுவரை கால அனுபவத்திலிருந்து நோக்கினால், இந்த உண்மை இன்னும் பிரகாசமாகத் தெரியும்.

இதனை கருத்தில் கொள்ளாமல் சர்வதேச அரசியல் பற்றி விவாதிப்பது அர்த்தமற்ற ஒன்றாகும். இந்தியாவை தாண்டிச் செல்ல வேண்டுமென்று விருப்பம் இருக்கலாம். குறிப்பாக இவ்வாறான சிந்தனைப் போக்கானது, யாழ். நல்லூர் கோவிலடியிலிருந்து பேசுவதற்கு இதமாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் ஒருபோதும் சாத்தியப்படாது. ஏனெனில் (ஜோன் மிய சைமர்) நீங்கள் (சிறிய நாடுகள்) ஒருபேரரசாயின் வாயிலில் வாழ்பவராக இருந்தால், உங்களுக்கான சொந்த வெளிவிவகாரக் கொள்கையை நிர்ணயிக்கும் உரிமை உங்களுக்கில்லை என்பது தான் பேரரசு மனோபாவமாகும். இந்த மனோபாவத்திலிருந்து தான் இந்திராகாந்தி இலங்கைப் பிரச்சினையை அணுகியிருந்தார். ஏனெனில் ஒரு பிராந்திய சக்தியானது, அதன் தேசிய பாதுகாப்பில் வெறித்தனமாக இருக்கின்றது, அதன் எல்லைப்புற பாதுகாப்பில் வெறித்தனமாக இருக்கின்றது. இதற்கு ரஷ்ய - உக்ரைன் யுத்தம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்திற்கான அடிப்படையான காரணம் என்ன? உக்ரைன் நேட்டோவுடன் இணைந்து கொள்ள முற்பட்டதை ரஷ்யா ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் ரஷ்யா ஏற்றுக் கொள்ள வேண்டும்? உக்ரைன் ஒரு இறைமையுள்ள நாடு. அதன் வெளி விவகாரக் கொள்கையை அது தீர்மானிக்க முடியும். ஆனால் அதனை ரஷ்யா ஏற்றுக் கொள்ளவில்லை. உக்ரைன் நேட்டோவுடன் இணைந்து கொள்ளக் கூடாது. அப்படி முயற்சித்தால் அதனை ரஷ்யா அனுமதிக்காது.

இந்த அடிப்படையில் தான் இந்த யுத்தம் நிகழ்கின்றது. ஏன் ரஷ்யா அதனை எதிர்க்கின்றது? ஏனெனில், உக்ரைன் நேட்டோவோடு இணைந்தால், அது தனது தேசிய பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்குமென்று ரஷ்யா கருதுகின்றது.

ஏனெனில் ரஷ்யா அதன் தேசிய பாதுகாப்பில் மற்றும் எல்லைப்புற பாதுகாப்பில் வெறித்தனமாக இருக்கின்றது. இலங்கை விவகாரத்தில் இந்தியா இராணுவ ரீதியாக தலையீடு செய்த பின்னணியை சரியாக விளங்கிக் கொள்ள முயற்சிப்போமானால், உக்ரைன் ஜனாதிபதியின் அனுகுமுறைக்கும் ஜே.ஆர். ஜெயவர்தனவின் அணுகுமுறைக்கும் இடையில் சில ஒற்றுமைகளைக் காணலாம்.

இந்திராகாந்தி தலைமையிலான இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளை புறம்தள்ளி செயற்பட்டதன் விளைவாகவே, அன்று இந்திராகாந்தி சில கடுமையான முடிவுகளை எடுக்க நேர்ந்தது. இலங்கையின் கடற்படைத் தனங்களை மிகவும் குறுகிய நேரத்திற்குள் கைப்பற்றும் திட்டமொன்றிற்கும் இந்திரா காந்தி உத்தரவிட்டிருந்ததாக ஒரு செய்தி பின்னர் வெளியானது.


ஆனால் அவர் சீக்கிய மெய்ப் பாதுகாவலரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அந்த உத்தரவு அப்படியே கிடப்பிற்குச் சென்று விட்டது. இந்திரா காந்தி தனிநாட்டை ஆதரிக்கவில்லை , ஆனால் ஈழத்தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்.

இந்திராகாந்திக்குப் பின்னர் விடயங்களை கையாண்ட ராஜீவ்காந்தி விடயங்களில் தீவிரம் காண்பித்தார். அனைத்தையும் விரைவாக முடித்து விட வேண்டுமென்று எண்ணினார். இது நிலைமைகளை சிக்கலாக்கியது. பின்னர் நடந்த சம்பவங்கள் அனைத்தும் இந்தியாவை ஈழத் தமிழர்களின் எதிரியென்னும் நிலைக்கு வெளியில் தள்ளி விட்டது.

இந்த அனுபவங்களிலிருந்து தான் போருக்குப் பின்னரான சர்வதேச அரசியல் சூழலை நோக்க வேண்டும். போருக்குப் பின்னரான சூழலில் இந்தியா. வானது, அது விட்டுச் சென்ற இடத்திலிருந்தே ஈழத்தமிழர் பிரச்சினையை நோக்குகின்றது. இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் 30 வருட காலத்தின் விடயங்கள் எதனையும் புதுடில்லி பாரதூரமான விடயங்களாக நோக்கவில்லை. குறித்த காலத்தை இந்தியாவை விரோதித்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலமாகவே நோக்குவதாக நான் கருதுகின்றேன்.

தர்க்க ரீதியில் நோக்கினால் எனது கணிப்பு சரியானது. ஏனெனில் ஈழத் தமிழர்களுக்கான தனிநாட்டை இந்தியா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்பதை இயக்கங்களுக்கு பயிற்சியளித்த காலத்திலேயே இந்தியா நேர்மையாகவே கூறியிருக்கின்றது. அதன் பின்னர் இடம் பெற்ற விடயங்கள் தங்களுக்கு அவசியமற்றதென்று புதுடில்லி கருதினால் அதில் முரண்பட முடியாது. இந்த பின்புலத்தில் தான் இந்தியா தொடர்ந்தும் இந்திய இலங்கை (22ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும் வாரம். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் தீர்வு ஏற்படும்.




ரிஸபராசி அன்பர்களே! புத்தி சாதூரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும் வாரம். எதை செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





மிதுனராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காணும் வாரம். தெளிவான மன நிலை இருக்கும். சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





கடகராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும் வாரம். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். ஆனால் பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்னைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.




சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிக்கும் வாரம். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும்.




கன்னிராசி அன்பர்களே! சமயோசிதமாக செயல்படும் திறமை அதிகரிக்கும் வாரம் வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பணவரத்து கூடும். எதிர் பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுப்பறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும் வாரம். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புது தெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும் வாரம். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகஎதையும் செய்து முடிப்பர்








தனுசுராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும் வாரம். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சனைகள் குறையும். உத்தியோகஸ்தர்கள் பாராட்டு பெறுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! பணவரத்து கூடும் வாரம். செயல் திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படும்




கும்பராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த் காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும் வாரம். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மைதரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோயகள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டிய வாரம். சுலபமாக முடிந்துவிடும் என நினைக்கும் காரியம்கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சர்வதேச அரசியலும் ஈழத்தமிழர்

21ம் பக்கத் தொடர்ச்சி) ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாதிட்டு வருகின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து ஆரம்பிப்பது பற்றியே பேசி வருகின்றது. ஆழமாக விடயத்தை நோக்கினால், இதற்கப்பால் புதுடில்லியால் எதனை வலியுறுத்த முடியுமென்னும் கேள்வியுண்டு.

ஏனெனில் 13ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கே படைகளை இறக்க வேண்டியேற்பட்டது. ஒரு புறம் இந்திய பயிற்சி பெற்ற ஆயுத இயக்கங்களுக்கு உதவிக் கொண்டே, அந்த இயக்கங்களை சமாதானத்திற்கு இணங்கச் செய்வது என்னும் அடிப்படையில் தான் இந்தியப் படைகள் வடக்கு, கிழக்கிற்கு அனுப்பப்பட்டன. இந்தப் பின்புலத்தில் தான், ஜே.ஆர். ஜெயவர்தன இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு இணங்கியிருந்தார். இதன் காரணமாகத் தான், இன்றும் சிங்கள தேசியவாத தரப்புகள், 13ஆவது திருத்தச் சட்டம் தங்களின் குரல் வளையை நசித்துக் கொண்டு வரப்பட்ட விடயம் என்கின்றனர்.

இந்து சமுத்திர பிராந்தியத்தை முன்னிலைப்படுத்தி இடம்பெறும் புவிசார் அரசியல் மோதல்களை (யுத்தம் அல்ல) ஈழத் தமிழர்களின் நோக்கு நிலையில் எவ்வாறு புரிந்து கொள்ளலாம்? இந்த இடத்தில் தான் சீனா ஒரு விடயமாக இருக்கின்றது. சீனா, குறிப்பாக தற்போதிருக்கும் ஜி ஜின்பிங் தலைமையிலான சீனா, இந்து சமுத்திர பிராந்தியத்தில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிக்கின்றது. இன்றைய நிலையில் ஒரேயொரு மேலாதிக்க சக்தியாக (ஹெஜிமொனிக் பவர்) அமெரிக்கா மட்டுமே உள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்காவிற்கு இரண்டாவது நிலையிலுள்ள சீனா, இராணுவ ரீதியிலும் தன்னை பலப்படுத்தி வருகின்றது. ஆசியாவில் ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சி பெறுவதே சீனாவின் கனவுத் திட்டமென்று கூறப்படுகின்றது. குறிப்பாக மேற்குலக அரசியல் மூலோபாயவாதிகள் இவ்வாறானதொரு பார்வையையே முன் வைக்கின்றனர். இந்து சமுத்திர பிராந்தியத்தை மேற்கு சமுத்திர பிராந்தியமாக மாற்றுவதே சீனாவின் இலக்கென்று கூறப்படுகின்றது. ஏனெனில் சீன இலக்கியங்களில் இந்து சமுத்திரம் என்று ஒன்றில்லை. அதனை மேற்கு (மேற்கத்தைய அல்ல) சமுத்திரம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு இலக்குடன் தான், சீனா, இந்து சமுத்திர பிராந்தியத்தில் அதன் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. பேராசிரியர் பற்றிக் மெண்டிலின் ஆய்வின்படி தாய்வானும் இலங்கையும் சீனாவிற்கான மூழ்க முடியாத விமானம் தாங்கிக் கப்பல் போன்றது. சீனா தொடர்பான ஆய்வுகளுக்கு அப்பால், இலங்கைத்தீவில் சீனா அதிகம் ஆர்வத்தை காண்பித்து வருகின்றது என்பதும் அதிலிருந்து சீனா விலகி விடப் போவதில்லை என்பதும் தெளிவாகவே தெரிகின்றது. இதனை சமாளிப்பதற்கான நகர்வுகளை இந்தியா நிச்சயம் மேற்கொள்ளும் என்பதிலும் இரு வேறு கருத்துகள் இல்லை. ஏனெனில் கொழும்பு தான் விரும்பியவாறு செயற்படுவதை அனுமதிப்பதற்கு ஒரு எல்லையுண்டு.

எனவே இந்து சமுத்திர பிராந்தியத்தை மையப்படுத்தியதாக இடம்பெற்று வரும் புவிசார் அரசியல் போட்டிகளை, ஈழத் தமிழர்களின் நோக்கு நிலையில் சிந்திப்பதாயின் அங்கும் இந்தியா தான் முதன்மையாக இருக்கும். ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவிற்கு இருக்கும் இரண்டு சாதகமான விடயம். ஒன்று, தமிழ்நாடு. இரண்டு, புவியியல் அருகாமை. அமெரிக்காவின் கரிசனையும் முக்கியமானது தான். ஆனால் அது இந்தியாவின் கரிசனைகளோடு ஒத்தோடுவதாகவே இருக்கும். இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்காவின் அணுகுமுறைகள் பல்வேறு வகையானவை.

ஆனால் ஈழத்தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவின் அணுகுமுறை தனியானதாக இருக்காது. அவ்வாறான தேவைகள் எதுவும் அமெரிக்காவிற்கு இல்லை. இந்தியாவுடன் உறவுகளைப் பேணி வரும் அதேவேளை ஏனைய நாடுகளுடனும் அமெரிக்கா கூட்டுகளையும் வலுப்படுத்தியிருக்கின்றது.

ஏனெனில் சீனாவை ஒரு வரையறைக்குள் முடக்கும் அமெரிக்க வியூகம் விசாலமானது. சீனா ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியுறுவதை தடுப்பதே அமெரிக்க வியூகத்தின் அடிப் படையாகும். அதற்கான அனைத்தையும் அமெரிக்கா செய்தே தீரும். இந்தப் பின்புலத்தில் சர்வதேச அரசியல் தொடர்பில் வழக்கமான நல்லூர்க் கோவிலடி சிந்தனையை விடுத்து, இந்த பிராந்தியத்தின் தன்மையிலிருந்தும் அதில் இந்தியாவின் தவிர்க்க முடியாத முக்கியத்துவத்திலிருந்துமே நாம் விடயங்களை நோக்க வேண்டும்.

வரலாற்றில் சில விடயங்கள் மீளவும் நிகழலாம். இந்தியாவின் தலையீட்டின் தன்மைகளும் மாற்றமடையலாம். ஈழத் தமிழர்களுக்கான சர்வதேச அரசியல் முக்கியத்துவமும் மாற்றமடையலாம். ஆனால் அது நிகழும் வரை நம்மால் காத்திருக்க மட்டுமே முடியும். காத்திருக்கும் காலத்தில் என்ன செய்வது? எவ்வாறு செயற்படுவது? இது தொடர்பில் தான் தமிழ் அரசியலாளர்கள் என்போர், சிந்தனையாளர்கள் என்போர் சிந்திக்க முன்வர வேண்டும்.

# சம்பந்தன் காப்பாற்றிய ஜனநாயகம்?

5ம் பக்கத் தொடர்ச்சி) சம்பந்தனின் தலைமையில் அணிதிரளுவதற்கு அனைவருமே தயாராக இருந்தனர். ஆனால், சம்பந்தனோ தனது அப்புக்காத்து கணக்கினால் அனைத்தையும் கைநழுவ விட்டார். .இன்று வரையில் சம்பந்தன் தனது தவறுகளை ஆராயவோ, அதனை திருத்திக் கொள்ளவோ முயற்சிக்கவில்லை. கூட்டமைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

# காணாமல் போனோர் என யாரும் இல்லையென்றால் காணாமல்....

(8ம் பக்கத் தொடர்ச்சி) தமது உறவுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததாக பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இராணுவம் மற்றும் காணாமல் போனோர் அலுவலகத்தின் கருத்துக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை மலினப்படுத்தும் வகையில் உள்ளது. முரணான கருத்துக்களினால் தான் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருசில செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஆகவே காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நீதியமைச்சர் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

இதன் போது மீண்டும் எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. அறிவுறுத்தியமைக்கு நன்றி இவ்விடயம் தொடர்பில் நான் அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுக்கிறேன் என்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)





மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life





OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*







RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.



